விலை: 20/=

செய்வது துணிந்து செய் சொல்வது தெளிந்து சொல்


# நமது முரசொலி

නමදු මුරසොලි

Namathu Murasoly

வார இதழ்

முரசு - 01 (27.09.2013 - 03.10.2013) திருவள்ளுவர் ஆண்டு: 2044 முழக்கம் - 05



## இரண்டு மே - 18 க்கள்

# கேட்டதைக் கொடுத்தனர் மக்கள்

# இரண்டு மே-18களும் மக்கள் ஆணையும்

## (மிதவாதத்திலிருந்து தீவிரவாதத்திற்கும் தீவிரவாதத்திலிருந்து மிதவாதத்திற்கும்)

தமிழர் தேசிய விடுதலைக்கான முப்பது வருட கால சாத்வீகப் போராட்டத்தின் நிறைவுக்கட்டத்தில் 1976 மே 14 ம் திகதி வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு 1977 தேர்தலில் "ஈழத் தமிழர்களின் அரசியல் இலக்கு தனிவேறான தமிழீழ அரசு" என்பதை ஆணித்தரமாக எடுத்தியம்பும் மக்களாணை பெறப்பட்டது. இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தமிழர் தாயகம் வேண்டும். அதில் ஒரு தேசிய இனமாக தமிழரின் அரசியல் இலக்கை அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் தன்னாட்சி உரிமை வேண்டும் என்ற தீர்மானத்தின் சாரம் "சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழத் தனியரசு" என்பதே. இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களைப் பொறுத்தவரை இதுவே ஜனநாயக முறையில் தமது மக்களாணையை அவர்கள் முதலாவதாக மட்டுமல்ல, இறுதியாகவும் வெளிப்படுத்தக் கூடியதாக விருந்த சந்தர்ப்பமாகும்.

1977 இற்குப் பின்னர் தமிழீழம் குறித்த மக்களாணையை இலங்கைத் தீவில் ஜனநாயக முறையில் முன்வைக்க முடியாதவாறு அடக்குமுறைச் சட்டங்கள் (1979 பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்) கொண்டுவரப்பட்டன மட்டுமல்ல சிறிலங்காவின் அரசியல் யாப்பில் 6ம் திருத்தம் என்ற திருத்தத்தையும், 1983இல் கொண்டுவந்து தனிநாட்டுக் கோட்பாட்டை - அதாவது இந்த ஜனநாயக ரீதியிலான மக்களாணையை - யாப்புரீதியாகவே சிறிலங்கா அரசு மறுதலித்துவிட்டது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு 77இல் கிடைத்த மக்களாணையை அடிப்படையாகக் கொண்டே பின்னாட்களில் தொடர்ந்த ஆயுத வழியிலான் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. வட்டுக் கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 36 வருடங்கள் கடந்துவிட்டது. இதற்குப் பிறகு எத்தனையோ நடந்து முடிந்து ஒரு பாரிய இனவழிப்பிற்குப் பின்னர் எஞ்சிய, தோற்றுப் போன இனமாக தமிழர்கள் தெரிகின்றார்கள். இதைத்தான் வட்டுக்கோட்டையில் தொடங்கிய தமிழர்களின் போராட்டம் நந்திக்கடலில் நடந்த சமருடன் முடிவடைந்துவிட்டதாக அரசு தனது "போர் வெற்றிப் பிரகடனத்தில்" முழங்கியிருந்தது.

முப்பது வருடகால அகிம்சைப்போர், முப்பது வருடகாலத்திற்கும் மேலாக நீண்ட ஆயுதப்போர் என்பவற்றின் முடிவில், ஆரம்பிக்கும் புதியதொரு தேசிய விடுதலைப் போராட்ட வடிவத்தின் நுழைவாயிலில் நின்றபடி மீண்டும் ஒரு மக்கள் ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. 1977 இல் வழங்கப்பட்ட ஆணைக்கு இதனை ஒப்பிடுபவர்கள் இரண்டு காலப்பகுதிகளின் சூழமைவுகளையும் சிந்திப்பார்களாயின் இன்றைய மக்கள் ஆணையின் கனதி நன்கு புரியும். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஆதரித்து ஆணையிட்டபோது, பிரிவினைக்கான கோரிக்கைக்காக பேரினவாதம் பரிசளிக்கக்கூடிய இனப்படுகொலையை அனுபவித்து மீண்ட, அழிக்கப்பட்ட, ஒரு இனமாகவோ, அபிவிருத்தியை வேண்டிநிற்கும் பொருளாதாரச் சிதைவுகண்ட தேசமொன்றின் மக்களாகவோ தமிழ் மக்கள் இருக்கவில்லை.

இன்று நிலைமை அதுவல்ல. போர் தின்ற தேசமொன்றில் இனஅழிப்பின் முடிவில், தோற்றுப்போன ஒரு இனமாக, தொடரும் அரச பயங்கரவாதத்தின் நேரடி, மறைமுக அச்சுறுத்தல்களுக்கும், கண்காணிப்புக்கும் மத்தியில் அச்சமின்றி உரத்துத் தங்கள் உரிமைக்குரலை தமிழர்கள் முழங்கியிருக்கிறார்கள். எத்தனையோ இழப்புக்களைச் சந்தித்த தமிழ் மக்கள், வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவப் பிரசன்னம், சட்டவிரோத மீள் குடியேற்றம், நெருக்கீடுகள், ஆபத்துக்கள் மத்தியில் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் திரண்டெழுந்து தங்கள் விடுதலைக்காக - உரிமைக்காக வாக்களித்துள்ளனர். தமது உயிரையும் வாழ்வையும் பணயம் வைத்த இந்த உரிமை முழக்கம் பலருக்குப் பல செய்திகளைச் சொல்லியிருக்கின்றது. பல அதிர்வுகளையும் தோற்றுவித்திருக்கின்றது.

தேர்தலில் தமிழர்கள் தமது தீர்க்கமான முடிவை, ஜனநாயக ரீதியில் சர்வதேசத்தின் செவிகளில் எடுத்துரைத்திருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் போர் முடிந்தவுடன் சில நாடுகள் ஈழத்தமிழர்கள் தங்களுடைய தேசியக் கோட்பாட்டைக் கைவிட்டுவிட்டு எந்தவிதமான தீர்வையும் ஏற்றுக்கொள்வார்கள் என்றும், ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை 13வது திருத்தச் சட்டத்திற்குள் அடக்கிவிடலாம் என்றும் கனவுகாண்கின்றன. இந்நிலையில் நாங்கள் இறைமையுள்ள தனித்தேசியமாகவே வாழ விரும்புகிறோம். வன்னிப்போரில் இலங்கை அரசுக்கு ஆயுத உதவி செய்து, இராணுவ தொழில்நுட்ப வளங்களை வழங்கி விடுதலைப் புலிகளை நீங்கள் தோற்கடித்திருக்கலாம். ஆனால் நாங்கள் தனித்துவமாகவே வாழ விரும்புகிறோம். அதுவே எங்கள் அபிலாசை. தாயகம், தேசியம், தன்னாட்சி என்பனவையே தமிழர்களின் அபிலாஷை என்று தமிழர்கள் சொன்ன செய்தியை அதன் உண்மைகளைச் சர்வதேசம் புரிந்து கொண்டால் - புரிதலுக்கு அமைவாகச் செயற்பட்டால், இலங்கையின் எதிர்காலம் அமைதியானதாக, ஆரோக்கியமானதாக இருக்கும்.

**"தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட் டத்திற்கான செயற்திட்டமொன்றைத் தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்க வேண்டும். தமிழர்கள் மீதான உலக அனுதாபத்தினை எங்கள் அபிலாஷைகளை நிறை வேற்றிக் கொள்ளும் அரசியற் தீர்வாக வடிவ மாற்றம் செய்வதற்கான இராஜதந்திரப் பயண த்தை காலத்தின் அவசர தேவை உணர்ந்து முன்னெடுக்கவேண்டும்."**

வடக்கு மாகாணத்தில் அதிகூடிய வாக்களிப்பும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வரலாறு காணாத வெற்றியும் வெறுமனே ஒருதேர்தல் வெற்றி மட்டுமல்ல. அது நாட்டை ஆளும் அரசாங்கங்களுக்கும் கடும் போக்காளர்களுக்குமான தமிழரின் செய்தி. இதன் மூலம் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு முக்கியமான செய்திகளை தமிழ் மக்கள் கூறியுள்ளனர். அபிவிருத்தி என்று வீதிகளைப் புனரமைக்கலாம், வீடுகளைக் கட்டலாம், வடக்கின் வசந்தம் என்று யாழ்.தேவியில் கிளிநொச்சி வரை வரலாம். ஆனால் சலுகைகளால் எங்கள் மனங்களை வென்றுவிட முடியாது. காலாகாலமாக நீங்கள் எங்களுக்குச் செய்த கொடுமைகளை மறந்து உங்களோடு நாங்கள் சேர்ந்து வாழ்வதென்பது கடினமானது. போரில் தமிழ் மக்களைக் கொன்றொழித்து, நீங்கள் எங்கள் இனத்தைக் கருவறுத்த கொடுமையை நாம் எக்காலத்திலும் மன்னிக்கவோ, மறக்கவோ மாட்டோம். நாம் போராடியது ஜனநாயக உரிமை என்று நீங்கள் குறிப்பிடும் தேர்தலுக்காகவோ அல்லது பாதையைத் திறந்து போக்குவரத்து உரிமை என்று பெயரிடும் அபிருத்திக்காகவோ அல்ல என்ற அரசிற்கான தமிழரின் செய்தி தெளிவானது.

இலங்கை அரசிற்குத் தமிழர்கள் தந்த செய்தியின் அதிர்வை அரசு புரிந்து கொண்டதாகவே தெரிகிறது. வடக்கு மக்களின் அபிலாஷைகள் மற்றும் தேவைகள் குறித்து அரசாங்கம் மீளச் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பேசுவது இவ்வாறான ஒரு மீள்புரிதலின் ஒரு அடை யாளமே.

அரசின் அத்தனை ஆசை வார்த்தைகளையும், தடுமாற வைக்கும் தந்திரங்களையும் புறந்தள்ளி தமிழ் மக்கள் 1977 ஆம் ஆண்டுக்கு முன் ஒரு ஆணையை எப்படித் தந்தார்களோ அதைவிட இரட்டிப்புத் தன்மையான பலத்தையும் மக்கள் எழுச்சியையும் காட்ட வேண்டிய காலத்தின் நியதியைக் கருத்தில் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அவர்கள் கேட்ட வெற்றியைக் கையளித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல கூடவே சில செய்திகளையும் வழங்கியிருக்கிறார்கள்.

30 ஆசனங்கள் என்பது உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட எதிர்பாராத வெற்றி. அது மேடைகளில் அவர்கள் பேசிய அதிகபட்சக் கனவு மட்டுமே. விடுதலைக்காகவும், சுயகௌரவத்துடன் வாழும் கனவுக்காகவும். அந்த ஏக்கத்துடன், கனவுடன் இறந்துபோன லட்சம் பேர் புதைக்கப்பட்ட மண்ணில் நின்று கொண்டிருக்கும் மக்கள் அதை நனவாக்கியிருக்கிறார்கள். வெற்றியாளர்கள் அந்த மக்களின் கனவுகளைப் புரிந்து கொள்வதும், அதன்வழி மக்களையும் தேசிய விடுதலைப் போரையும் வழிநடத்திச் செல்வதும் மட்டுமே மக்களுக்கு வழங்கத்தக்க ஒரே கைமாறு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் மிகச்சிறந்த தெரிவு அல்ல, ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் பார்க்க மிகச்சிறந்த தெரிவு தமிழர்களுக்கு தற்போது இல்லை என்பதே யதார்த்தம். தேர்தலுக்கு முன்னும், அதன் பின்னும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது விரக்தி கொள்ளவும், வெறுப்படையவும் தமிழர்களுக்கு பல அரசியல், நிர்வாகக் காரணங்கள் இருக்கின்றன. அதுபோலவே தேர்தலில் போட்டியிட்ட அனைவருமே தமிழத் தேசியத்திற்காக தமது வாழ்வினை அர்ப்பணித்தவர்களோ, தியாகிகளோ அல்லர். இவர்களில் பலர்மீது கடுமையான விமர்சனங்கள் இருந்தாலுங்கூட இதைப்பற்றிப் பேசுவது, விமர்சிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால் தமிழர்கள் அத்தனையையும் மறந்து, மன்னித்து வரலாற்று வெற்றியைப் பரிசளித்திருக்கிறார்கள்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்களின் அரசியல் தலைமைத்துவத்தின் - சாணக்கியத்தின் மீதான கவர்ச்சியாலோ, விக்னேஸ்வரன் அவர்களின் அறிவு சட்டப் புலமை மீதான அசையாத நம்பிக்கையாலோ, தேர்தல் விஞ்ஞாபனத்தின் கொள்கைகளால் கவரப்பட்டோ மட்டும் தமிழ் மக்கள் கூட்டமைப்பைத் தெரிவுசெய்து வெல்ல வைக்கவில்லை, தேசிய விடுதலைப் போருக்காக கொடுக்கப்பட்ட விலைகளும், தியாகமும் வீணாகி விடக்கூடாது என்பதற்காகவும் தேர்ந்தெடுத்தார்கள். மக்கள் கொடுத்த ஆணைக்கு மாறான அரசியல் தடத்தில் நகர்ந்து தமிழினத்தை மீண்டும் ஏமாற்றி விடாமல் இருக்க மக்கள் இவர்களை இறைஞ்சுகிறார்கள்.

ஒரு காலத்தில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்குக் காரணம், சிங்கள அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல. தமிழ் மிதவாதத் தலைவர்களுமே. இவர்கள் செய்த ஜனநாயக அரசியலின் தோல்வியே இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தது. தமிழீழம் பெற்றுத் தருவோம் என்று தேர்தலில் வென்ற அன்றைய அரசியற் தலைவர்கள் பின்னர் வேறு கனவுகளில் மூழ்கியமையால் தமிழினம் இத்தனை அழிவுகளையும் கண்டதை மறந்து விடக்கூடாது.

1977இல் தமிழீழம் கேட்டவர்கள், 1981 இல் மாவட்டசபையை ஏற்றுக் கொண்டமையால் 1983 மே 18 இல் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் மிதவாத அரசியல் தலைமைகளை அரசியல் அரங்கிலிருந்து தூக்கித் தூரவீசிவிட்டு தீவிரவாதத் தலைமையின் பின்னால் அணிதிரண்டமையும், ஏறத்தாழ இரு தசாப்தத்தின் பின்னர் தீவிரவாதத் தலைமையின் அங்கீகாரத்துடனும் ஆசீர்வாதத்துடனும் மீண்டும் அரசியல் அரங்கில் அங்கீகாரம் பெறவேண்டியிருந்தமையும் கடந்தகால வரலாறு. மீண்டும் ஒரு மே 18 இல் ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்ட நிலையில் மிதவாத அரசியல் தலைவர்களிடம் போராட்டம் முழுமையாகக் கையளிக்கப்பட்டிருக்கிறது. கடந்தகாலத் தவறுகளின் வரலாற்றுத் தண்டனையை இன்றைய தலைமைகள் நினைவில் கொண்டு தமிழர்களை வழிநடத்திச் செல்வது காலச்சக்கரம் மீண்டும் பழைய ஒழுங்கில் சுழன்றுவிடாமல் தடுக்கும்.

இலங்கை அரசும் ஆயுதப் போராட்டத்திற்கு முன்பு செய்த எல்லா நடவடிக்கைகளையும் முதலில் இருந்து இப்போது தொடங்கியுள்ளது. அத்துமீறல்களும், அடாவடிகளும், அபகரிப்புக்களும் தொடர்கின்றன. தேர்தல் தந்த தோல்வியின் விரக்தியால் எதிர்காலத்தில் இவை மேலும் அதிகரிக்கலாம். யாழ்.மாவட்டத்தில் மேலும் பல இராணுவ முகாம்களை அமைக்க வேண்டும் என்ற ஹத்துருசிங்கவின் ஆதங்கம் இவ்வகையானதே. இவ்வேளையில் மக்கள் ஆணையை மீறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டால் தமிழ் இளையோர் தீவிரவாத அரசியல் அடிப்படையில் அந்த மக்களாணைக்குச் செயல்வடிவம் கொடுக்கவும், மிதவாத அரசியலைப் புறக்கணிக்கவும் விழையும் ஆபத்திருத்தலை புரிதல் தமிழினத்திற்கு செய்யும் வரலாற்று உதவி. " கேட்டது தமிழீழம் கிடைத்தது ஜப்பான் ஜீப்" "தமிழீழம் கேட்டவர்களுக்கு தமிழகத்தில் தனி வீடு கிடைத்தது" போன்ற பழைய கோசங்கள் மீண்டும் நினைவுபடுத்தப்படுமானால் - அவ்வாறு நடந்தால், இன்றைய தேர்தலில் ஆட்சியாளர்களுக்குச் சாமரம் வீசியவர்களுக்கு நடந்ததே, நாளை தமிழ்க் கூட்டமைப்பிற்கும் நடக்கும். மீண்டுமொருமுறை அவ்வாறு நிகழுமானால் இந்தத் தேர்தல் வெற்றி மீண்டுமொரு மீளமுடியாத ஜனநாயகத் தோல்விக்குள் தமிழினத்தைத் தள்ளிவிடும்.

முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இனப் படுகொலை செய்யப்பட்டபின் சர்வதேச சக்திகள் பயங்கரவாதத்தின் மீதான போர் என்று சொல்ல இனிமேல் வாய்ப்பில்லை. அரசு பாரிய மனித உரிமை மீறல், போர்க்குற்றம், இன அழிப்பு புரிந்ததாக உலகநாடுகள் ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகி வருகிறது. உலகின் அனுதாபம் தமிழர்கள் மீது திரும்பியுள்ள இந்த வேளையில், தமிழ் வாக்காளர்களிடமிருந்து அமோகமான ஆணையைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெறுமனே பதவிப் போட்டிகளிலும், உள்வீட்டுச் சர்ச்சைகளிலும், அமைச்சுக்கான அடிபிடிகளிலும், போனஸ் ஆசன ஒதுக்கீட்டிலும் காலத்தை வீணாக்காது, தமிழ் தேசத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான செயற்திட்டமொன்றைத் தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்க வேண்டும். தமிழர்கள் மீதான உலக அனுதாபத்தினை எங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அரசியற் தீர்வாக வடிவமாற்றம் செய்வதற்கான இராஜதந்திரப் பயணத்தை காலத்தின் அவசர தேவை உணர்ந்து முன்னெடுக்க வேண்டும். இதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குத் தமிழர்கள் வழங்கிய ஆணை. ●

—வளவன்

நமது முரசொலி
Namathu Murasoly வார இதழ்
முரசு - 01(27.09.2013 - 03.10.2013) திருவள்ளுவர் ஆண்டு 2044 முழக்கம் - 05

இல : 18/1 இளையதம்பி ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர்
E-mail : namathumurasolo@gmail.com. Tel : 0773673829

## நல்லாட்சி மலர நாம் என்ன செய்யலாம்?

தமிழ் மக்கள் அரசியலில் இன்னமும் தெளிவாக இருக்கிறார்கள் என்பதனை மாகாணசபைத் தோதல் முடிவுகள் வெளிப் படுத்தியுள்ளன. தமது ஒன்றுபட்ட கருத்தக்களை வாக்குச் சீட்டினால் மக்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். மக்களின் இந்த ஒருமித்த கருத்தி ற்கும், ஆர்வமிக்க தேர்தல் பங்கேற்புக்கும் உலகத் தமிழினமே தலைவணங்கி நிற்கின்றது.

தேர்தலுக்காக அக்கறையோடு பணியாற்றிய யாவருக்கும் நமது முரசொலியின் வாழ்த்துக்களும்,பாராட்டுக்களும். அத்துடன் நீதியுடனும், பொறுப்புடனும் கண்காணிப்பில் ஈடுபட்ட வெளிநாட்டு, உள் நாட்டுக் கண்காணிப்பாளர்களின் கடமைகளும் பாராட்டப் படத்தக் கதே. தேர்தல் திணைக்களத்தின் பணிகளும், அவர்கள் விதித்த கட்டுப் பாடுகளும் பாரபட்சமற்ற நடவடிக்கைகளும் தேர்தல் சிறப்புற நடந்து முடிவதற்குப் பலம் சேர்த்திருந்தன.

தேர்தல் நடந்து முடிந்துள்ளது. வெற்றி பெற்றவர்களும், அவர் தம் கட்சிகளின் பங்காளர்களும், சமூகத்தை நல்வழியில் நடாத்த வேண்டிய பல பொறுப்புக்களைத் தற்போது ஏற்றுள்ளார்கள். மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து, தூர நோக்குடன், பாரபட்சமின்றி மக்கள் பங்கேற்புடன் முன்னெடுக்க வேண்டிய பணிகள் பல அவர்கள் முன் காத்துக் கிடக்கின்றன. வெற்றியைப் பெற்றுவிட்ட மகிழ்வில் திளை த்திருக்காது, அதேநேரம் தோல்வியெனவும் துவண்டுவிடாது தமிழினத்தின் ஒற்றுமைக்கும், எதிர்காலத்திற்குமென்று அவர்கள் துயர் கழையும் பணிகளில் ஒன்றுபட்டு, அழிந்துகிடக்கும் தேசத்துக்கு நம்பிக்கையூட்டி, மீண்டும் மிடுக்குடன் மிளிரச்செய்ய வேண்டியது அசியமாகின்றது. இதற்கான முன்னெடுப்பே மக்களை மகிழ்விக்கும். எம் தேசத்திற்கும் விடிவைத் தரும்.

தேர்தல் அவ்வப்போது பல வடிவங்களில் வந்து போகும். தமிழரின் ஒற்றுமையைச் சிதைக்க அந்தக் காலத்திலே போலி வாக்குறு திகளும், மாய வலைவீச்சுக்களும், நய வஞ்சகமான பிற்போக்குத் தனங்களும் எம்முண்ணே எழுந்து வந்து நிழலாடும். இருப்பினும், எந்தவொரு மாஜைகளுக்குள்ளும், வீழ்ந்து விடாதவர்களென, இத்தேர்தல் மீளவும் வலியுறுத்தியுள்ளது. இது பற்றித் தகுந்தவர்கள், இதற்குப் பொருத்தமானவர்கள் இதை நன்கு அவதானிப்பார்களாக.

தேர்தலில் அவதானிக்கப்பட்டுள்ள மற்றுமொரு அவதானம், தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 35 ஆயிரத்தையும் தாண்டியது என்பது! தமிழ்மக்கள் பலரது வாக்குகள் பல்வேறு காரணங்களினால் செல்லுபடியற்றவை ஆகியுள்ளன. இதற்கு உள்ளிருந்தும், வெளியேயும் பல்வேறு காரணங்கள் தூண்டற்காரணிகளாவும் இருந்துள்ளன. அது பற்றியும் சற்று நிதானித்துச் சிந்திப்பது அவசியமானதே. வாக்களிக்கும் உரிமையை அளித்து விட்டால் மட்டும் போதாது. கூடவே அவ்வுரிமை நிலைநாட்டப்படுவதற்குத் தேவையான புறவய காரணிகளையும் அமைத்துக் கொடுத்தல் ஜனநாயகத்தின்பாற்பட்ட கடமையாகும். அத்துடன், இன்றும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படாமல் பலரது பெயர்கள் விடுபட்டுப் போயுள்ளன. தேர்தல் வெற்றிகளைக் கொண்டா டுகையில் இவ்விடயங்களையும் கவனத்திற் கொள்ளுதல் அவசியமானது. இன்றைய காலத்தில் வாக்குரிமையே தமிழர் தேசத்திற்குப் பலமுள்ள ஆயுதமும், கருத்துக்களைக் கூறுவதற்கான சந்தர்ப்பமுமாகக் காணப்படுவதனால், தேசத்தின் எதிர்கால நிலைபெறுதலுக்கான செயற்றிட்டங்களுடன், ஆரோக்கியமான வாக்குப்பதிவினை உறுதி செய்வதற்கான செயற்றிட்டங்களும் மிகவும் அவசியமாகவுள்ளன.

இத்தேர்தலில் கூர்மையாக அவதானிக்கப்பட்டுள்ள மற்று மோர் எழுச்சிமிகு விடயம் இளைஞர்களின் பங்குபற்றுதலும், ஈடுபாடுமாகும். கடந்த காலங்களில் ஒதுங்கி நின்ற இளைஞர் சக்தி இம்முறை ஒன்றுபட்டுத் திரண்டெழுந்து வந்து கைகோர்த்துள்ளது. இந்த அணி திரள்வை, கடந்த காலங்களைப் போன்று, வெறுமனே தேர்தல் காலத்திற்கானதோர் ஒன்றுகூடி வருதலாக மட்டும் பயன்படுத்திக் கொள்ளாது, ஆற்றல்மிகு தேசத்தையும், அத்தேசத்தின் எதிர்காலத்தையும் மீட்டெடுப்பதற்கான செயற்றிட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கு உந்துசக்தியை வழங்குகின்ற அணிதிரள்வாகக் கட்டமைத்துக் கொள்ள வேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக இளைஞர்களைத் தற்காலிகமான காவி களாகவோ, சாவிகளாகவோ பயன்படுத்தாது, போர் தின்றுமிழ்ந்து, பொருளாதாரச் சிதைப்புக் குள்ளாகியிருக்கும் தேசமொன்றின் வரலாற்றையே மாற்றியமைக்கக் கூடியதோர் அறிவுசார் புலமைச் சொத்துக்களாக, எழுச்சிமிகு சமூகத்தைத் தொடர்ந்தும் பரிணமிக்கச் செய்யுமோர் அரசயில் மூலதனமாகத் திரளடைய வைக்க முயற்சிக்க வேண்டும்.

அதற்கானதோர் வாய்ப்பு மீண்டும் தற்போது கைகூடி வந்திருக்கையில், அதனை தவறவிடப்படலாகாது.

# கூட்டமைப்பின் பெருவெற்றியின் அர்த்தம் தான் என்ன?

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டிருக்கிறது. கிடைத்திருக்கும் வெற்றி கூட்டமைப்பு எதிர்பார்த்ததை விட அதிகமான பெரு வெற்றி எனத்தான் கூறவேண்டும். கூட்டமைப்பின் இந்த வெற்றியினை நாம் எவ்வாறு அர்த்தப்படுத்துவது.

இந்தப் பெரு வெற்றி மாகாண சபை முறைக்கோ, கூட்ட மைப்பின் அரசியல் பாதைக்கோ கூட்டமைப்பின் இயங்கு திறனனுக்கோ கிடைத்த வெற்றியாக எவரும் எடுத்துக் கொள்ள முடியாது. அவ்வாறு எடுத்துக்கொள்ளின் அது பெரும் அரசியல் தவறாகவே இருக்க முடியும்.

**"பல கட்சிகளின் ஒரு தேர்தல் கூட்டா? ஒரு அரசியல் இயக்கமா? என்பது ஒரு தெளிவான முடிவை இது வரை எடுக்க முடியாத தடுமாற்றத்துடன்தான் கூட்டமைப்பு செயற்பட்டு வருகிறது. கூட்டமைப்பின் அரசியல் செயற்திட்டம் (Political Working Programme) என்ன என்பது இது வரை தெளிவுபடுத்தப்படவில்லை. கூட்டமைப்பு எம்மை எங்கே அழைத்துச் செல்கிறது என்பது கூட தெளிவாகத் தெரியாத நிலைதான் இருந்து வருகிறது."**



அதிகாரங்கள் அற்றதொன்றே மாகாண சபை என்பதும், இது தமிழ்த் தேசத்தின் தேசிய பிரச்சினைக்கான அரசியற் தீர்விற்கு ஆரம்பப் புள்ளியாகக்கூட இது இருக்க முடியா தென்பதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைக்கும், இத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து கூட்டமைப்பு வேட்பாளருக்கும் மக்களுக்கும் தெளிவாகத் தெரிந்ததொரு விடயம் தான். பலர் இதனை வெளிப்படையாகத் தேர்தல் காலத்தில் வெளிப் படுத்தியும் உள்ளனர். இதனால், இத் தேர்தல் வெற்றியினை மாகாண சபை முறைமைக்கு மக்கள் அளித்த அங்கீகா ரமாகவோ, வடக்கு கிழக்கு பிரிந்த நிர்வாக அலகை மக்கள் ஏற் றுக்கொண்டு விட்டார்கள் என்றோ எவரும் அர்த்தம் காண முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைப்பு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒரு பலவீனமான நிறுவனமாகவே உள்ளது. இதனால் இதன் அரசியல் பாதையும் தெளிவற் றதாகவே உள்ளது. பல கட்சிகளின் ஒரு தேர்தல் கூட்டா? ஒரு அரசியல் இயக்கமா? என்பது பற்றி ஒரு தெளிவான முடிவை இதுவரை எடுக்க முடியாத தடுமாற்றத்துடன்தான் கூட்டமைப்பு செயற்பட்டு வருகிறது. கூட்டமைப்பின் அரசியல் செயற்திட்டம் (Political Working Programme) என்ன என்பது இதுவரை தெளிவுபடுத்தப் படவில்லை. கூட்டமைப்பு எம்மை எங்கே அழைத்துச் செல்கிறது என்பது கூட தெளிவாகத் தெரியாத நிலைதான் இருந்து வருகிறது. இதனால் இத்தகைய குழப்பங்கள் நிறைந்த கூட்ட மைப்பின் அரசியல் பாதைக்கு தமது வாக்களிப்பின் மூலம் அங்கீ காரம் வழங்கும் அளவுக்கு நமது மக்கள் முட்டாள்கள் அல்லர். இதனால் மக்கள் அளித்த வாக்கை கூட்டமைப்பின் அரசியல் பாதைக்கு கிடைத்த அங்கீகாரமாகக் கொள்ளமுடியாது.

கூட்டமைப்பு மிகுந்த செயற்திறன் கொண்ட அமைப்பு அல்ல என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. இது கூட்டமை ப்பைச் சேர்ந்தவர்க்கே நன்கு தெரிந்த விடயம்தான். செயற்திறன் என்று பார்த்தால் கூட்டமைப்பைவிட டக்ளஸ் முன்னிலையி லேயே நிற்கக்கூடியவர். இருந்த போதும் சிங்கள அரசை நமது மக்கள் மத்தியில் "விற்கும்" அரசியலில் ஈடுபட்டிருக்கும் அவரால் ஒருபோதும் நமது மக்களின் மனங்களை வெல்ல முடியாது என்பதைத் தேர்தல் முடிவுகள் மிகத் தெளிவாக காட்டி நிற் கின்றனர். இதனால் மக்களின் வாக்கு செயற்திறன் தொடர்பான மதிப்பீட்டில் இருந்து எழுந்ததும் அல்ல.

அப்படியானால் இத்தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தும் செய்திதான் என்ன. நமது மக்கள் எதற்காக வாக்களித்துள்ளனர்?

மக்களின் இந்த வாக்குகள் மிகத் தெளிவான அரசிற்கெதிரான வாக்குகள். ராணுவ ஆக்கிரமிப்புக்கெதிரான வாக்குகள்.

ஈழத் தமிழர் தேசத்தின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்ற பெருவிருப்பின்பாற்பட்டு கிடைத்த வாக்குகள். அனைத்துலக சமூகத்துடன் நமது குரலை ஓங்கி ஒலிக்க வைக்க வேண்டும் என்பதற்காக மக்கள் அளித்த வாக்குகள் அரசாங் கத்தின் கைகளில் மாகாண சபை நிர்வாகம் சென்றடையக் கூடாது என்பதற்கான வாக்குகள். சுய நினைய உரிமைக்கான நமது அரசியற் போராட்டத்தைத் தொடர்வதற்கு இத்தேர்த லையும் ஒரு கருவியாக பயன்படுத்தும் எண்னம் கொண்டு எழுந்த வாக்குகள்.

தமிழர் தேசம், தன்னுடையவர் என்று கருதி வாக்க ளிப்பதற்கு கூட்டமைப்பைத் தவிர எவ்வித தெரிவும் மக்களுக்கு இருக்கவில்லை. இத்தகையதொரு பிண்ணனியிலேயே கூட்ட மைப்பின் பலவீனங்கள் பற்றி நன்கு தெரிந்திருந்தும் மக்கள் கூட்டமைப்பிற்கு வாக்களித்திருக்கிறார்கள்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேர்மையாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இத் தேர்தல் முடிவுகள் கூட்டமைப்பின் பொறுப் புக்களை மேலும் அதிகரித்திருக்கிறது என்றே கூற வேண்டும். மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக கூட்டமைப்பு நடந்து கொள்ள வேண்டும். அரசிடமிருந்து நமது மக்களைப் பாது காக்கும் பொறுப்பும் கூட்டமைப்பின் கைகளில் உள்ளது. "மக்கள் ஆணை கிடைத்தால் வடக்கிலிருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்றுவோம்" எனக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட் பாளர் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் மக்கள் மத்தியில் சூளுரைத்திருந்தார். இப்போது மக்கள் உயரியதொரு ஆனை யினை அவருக்கு வழங்கியுள்ளனர். ராணுவத்தை எவ்வாறு வெளியேற்றுவது என்பதொரு தந்திரோபாயத்துடன் செயற்பட வேண்டியதும் தற்போது கூட்டமைப்பின் முன்னால் உள்ள பொறு ப்பாக இருக்கிறது.

வடக்கு மாகாண சபையினை முடக்குவதற்கு அரசும் சிங்கள, பௌத்த இனவாதமும் சட்டரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பல்வேறு இடயூறுகளை வழங்கும். இவற்றைக் கடந்து மாகாணசபை எதனையும் நமக்குச் சாதித்துத் தரப் போவதில்லை. ஆனால் இத் தேர்தல் மூலம் வெளிப் பட்டிருக்கும் மக்கள் ஆதரவினை ஓர் அரசியல் மூலதனமாக திரளடைய வைக்கக் கூடியதொரு வாய்ப்பு தற்போது கிடைத்திருக்கிறது.

**மாகாண சபையால் எததையும் செய்ய முடியாமல் இருக்கிறது என நான்கு வருடங்களின் பின்னர் கைவிரிப்பதற்காக கூட்டமைப்பிற்கு மக்கள் வாக்களிக்கவில்லை. மாகாண சபையினைக் கடந்து தமிழர் உரிமை போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுங்கள் என்பதற்காகவே வாக்க ளித்திருக்கிறார்கள்.**

இதனை கூட்டமைப்பு நன்கு உள்வாங்கிக் கொண்டு பலமானதொரு மக்கள் அமைப்பினைத் தாயகத்தில் கட்டியெழுப்ப வேண்டும். இந்த மக்கள் அமைப்பின் பலத்தில் நின்றுதான் அனைத்துலக சமுதாயத்தைக் கையாள வேண்டும்.

மாகாணசபையால் எதையும் செய்ய முடியாமல் இருக்கிறது என நான்கு வருடங்களின் பின்னர் கை விரிப்ப தற்காக கூட்டமைப்பிற்கு மக்கள் வாக்களிக்கவில்லை. மாகாண சபையினைக் கடந்து தமிழர் உரிமைப் போராட்டத்தை முன் னெடுத்துச் செல்லுங்கள் என்பதற்காகவே வாக்களித்திருக் கிறார்கள். மாகாணசபையை எப்படி கடப்பது என்பது குறித்து சிந்திப்பதே கூட்டமைப்பின் முன்னால் தற்போது உள்ள முக்கிய பணி.

— தாமரைக் காருண்யன்



# தேர்தல் அகமும் புறமும்

## துவாரகேஸ்வரன் துக்கியேறியப்பட்டார்





ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனின் சகோதரர் துவாரகேஸ்வரன் தாங்க முடியாத பின்னடைவை சந்தித்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக தனது பிரச்சார உத்திகளைக் கையாண்ட அவருக்கு மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கியிருப்பதாக தமிழ்தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர் ஒருவர் தெரிவித்தார். அதேவேளை துவாரகேஸ்வரனின் தோல்விக்கு மகேஸ்வரனின் மனைவி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலாவே முக்கிய காரணம் என ஒரு சாரார் தெரிவிக்கின்றனர். விஜயகலா இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நேரடியாக செயற்படாது தனது சார்பில் சுயேட்சைக் குழுவொன்றை களம் இறக்கியிருந்தார்.

அதேவேளை கூட்டமைப்பின் இரு வேட்பாளர்களும் துவாரகேஸ்வரனுக்கு வில்லங்கமாக அமைந்திருந்தனர். வர்த்தக சங்கத்தின் சார்பில் போட்டியிட்ட ஜெயசேகரனுக்கு வர்த்தகர்களின் வாக்குகளும், காரைநகரைச் சேர்ந்த தம்பிராசாவுக்கு காரைநகர் மக்களின் வாக்குகளும் கிடைத்தமை துவாரகேஸ்வரனுக்கு பெரும் பின்னடைவாக அமைந்திருந்தது. இதனால் துவாரகேஸ்வரன் கட்டுப்பணத்தையும் இழந்துள்ளார்.

**இதெல்லாம் சில்லறைக் காசப்பா அவருக்கு**

## வடலிகள் வானுயரும் ஆறுதல் அடைவோம்.

முன்பள்ளி ஆசிரியர்களையும், கல்வித் துறைசார் அதிகாரிகள் சிலரையும் நம்பி களமிறங்கிய அரச தரப்பு வேட்பாளரும், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான சுந்தரம் டிவகலாலாவும் கணிசமான வாக்குகளையேனும் பெறத்தவறியுள்ளார். தனது ஆறுதல் தொண்டு நிறுவனத்தைத் தொடர்ந்து நடாத்த வேண்டும். அதற்கு அரசின் ஒத்துழைப்பு அவசியம் என்பதனால் அரச தரப்பு அமைச்சரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த அவரின் கருத்துக்கு, மக்கள் செவிசாய்க்கவில்லை.



தேர்தலுக்கு அண்மித்த நாளிலும் 600 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அமைச்சர் பசிலின் கரங்களாலும் ஆளுனரின் கரங்களாலும் சான்றிதழ் வழங்கிய போதும் அதன் மூலம் கணிசமான வாக்குகளையேனும் பெற அவரால் முடியவில்லை.

'வடலிகள் வானு யரும்' என அடிக் கடி அவர் கூறும் தத்துவத்தைக் காப் பாற்ற அரசோடு இணைந்தவருக்கு, அவர் தோற்றாலும் வெற்றி என்று சிலர் பேசிக் கொள்வதிலும் அர்த்தமில்லாமல் இல்லை.

## தம்பிராசாவின் தடுகிடுத்தித் தனம்

கூட்டமைப்பு வேட்பாளர் தம்பிராசா தேர்தலுக்கு முன்னைய நாள் இரவு தனது இலக்கமான 7 இனை வெற்றி வேட்பாளர்களாக அறியப்பட்ட முதலமைச்சர் சீ.வி. விக்கினேஸ்வரன் மற்றும் பா.கஜதீபன் ஆகியோரின் படங்களுடன் கூடிய பதாதைகளில் இட்டு அவர்களது வாக்கை கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருந்தார். வாக்களிப்பு நிலையங்களை அண்டிய மதில்களில் இரவோடிரவாக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளினால் மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் வாக்காளர்கள் தெளிவாக இருந்தமையால் தம்பிராசாவின் எண்ணம் நிறைவேறவில்லை. 'இவ்வாறான மனநிலை கொண்டவர்களை சேர்த்து வைத்திருப்பது கூட்டமைப்புக்கு ஆபத்தானது' என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



**அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா**

## தலை முறை இடைவெளிக்குள் சிக்கிய ஆனந்த சங்கரி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரியினால் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு வாக்குகளைப் பெறமுடிய வில்லை. வீரசிங்கம் ஆனந்த சங்கரி என்றால் கிளிநொச்சிக்கு நன்கு தெரியும் என்ற காலம் முடிந்துவிட்டது என்பதை உணர மறுத்த சங்கரிக்குக் கிளிநொச்சி மக்களின் தீர்ப்பு கசப்பாகவே அமைந்துள்ளது. புதிய தலைமுறை வாக்காளர்கள் கிளிநொச்சிக்கும், சங்கரிக்கும் இடையேயான தொடர்பினை அறிந்திருக்க வாய்ப்பில்லை என்பதை அவர் முன்னரே புரிந்திருக்க வேண்டும். கிளிநொச்சியைத் தனிமாவட்டமாக அங்கீகரித்து இன்று அங்கிருந்து பல மாணவர்கள் குறைந்த வெட்டுப் புள்ளி யிலிருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாவதற்கு ஆனந்தசங்கரியும் ஒரு காரணம். இருந்தும் இராமன் பதினான்கு ஆண்டு வனவாசத்துக்கு அனுப்பப்பட்டு ஒரு தலைமுறைக்கு அறிமுகம் அற்றவராக மாற்றப்பட்டது போல, கிளிநொச்சிக்கு இன்று ஆனந்த சங்கரி மாறியுள்ளார்.

இதனை உணர்ந்து அவரைப் போனஸ் ஆசனத்தினால் உள்ளே கொண்டுவரம் திட்டமிட்டமிட்டிருந்த போதும் சங்கரிக்கு உரித்தான அந்த 'கிறேக்' குணம் அவரை நேரடியாகப் போட்டியிட வைத்தது. போனஸ் ஆசனமும் தேர்தலில் தோற்றவருக்கே வழங்கப்படவேண்டும் என மாகாண சபைத் தேர்தல் சட்டங்கள் கூறுவதால் மாகாண சபை உறுப்பினர் ஆவதற்கு சங்கரி சில சங்கடங்களைத் தாங்க வேண்டியவராகவே இருந்திருக்கின்றார்.

அதுமட்டுமன்றி கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் வளர்ச்சியை ஏற்றுக்கொள்ள முடியாத தரப்புக்கள் சங்கரியை வைத்துச் சிறிதரனின் மவுசைக் குறைக்கத் திட்டமிட்டிருந்தனர் என்பதும் ஒரு தரப்பினரின் கருத்து. இதற்கு ஆதாரமாக சிறிதரன் ஏற்கனவே அறிவகம் எனும் பெயரில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அலுவலகம் ஒன்றை இயக்கி வரும் நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவல கமாகவிருந்த சங்கரியின் அலுவலகத்தைக் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அலுவலகமாக மாற்றியமையை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இருந்தும் அண்மைய தேர்தல் முடிவுகள் கிளிநொச்சியில் சிறிதரன் தரப்புக்கு உள்ள வலுவை வெளிச்சம் போட்டுக் காட்டியிருப்பது அரசியல் களத்தில் கவனத்துக்குரியதொரு விடயமாகின்றது.



## அண்ணன் எங்கெடா தம்பி எங்கெடா!

இம் முறைத் தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்புக்குப் பிரதான போட்டியாளராகக் கருதப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் மூன்று தரப்பிலிருந்து வேட்பாளர்கள் இறக்கப்பட்டிருந்தனர். சுதந்திரக் கட்சியின் சார்பில் அங்கஜன் இராமநாதன் தலைமையிலான அணியினர், ஈ.பி.டி.பியின் சார்பில் சிலர், இராணுவத்தின் அனுசரணையில் என்று சொல்லப் படுகின்ற சிலர் என அவர்களை வகைப்படுத்த முடியும். இவர்களுள் இராணுவத்தினரால் இறக்கப்பட்டவர் என்று சொல்லப்படும் வேட்பாளர்கள் தமிழத் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கட்சி தாவிய சட்டத்தரணி றெமிடியஸ் அவர்கள். அவருடன் கூட அண்ணண் சிராஸ் என தன்னைப் பிரகடனப்படுத்தியவர், அகிலன் என அழைக்கப்படும் அகிலதாஸ் பொன்னம்பலம் என்போர்.

இவர்களுக்கான பிரச்சாரங்களையும் இராணுவத்தினரே மிகவும் விமரிசையாக அகப்படும் திசையாவும் முடுக்கி விட்டிரு ந்தனர் என்றும் கூறப்படுகின்றது. பத்தடி பத்தடித் தூரத்துக்குக் காப்பற் வீதிகளை அசிங்கப்படுத்தியும்(!) மின் கம்பங்கள் மதில் சுவர்கள் அனைத்தையும் பதாகைகளால் அலங்கோலப்படுத்தியும்(!) தங்கள் பிரச்சாரங்களை தேர்தலுக்கு முதல் நாள் இரவு வரையும் சட்டவிரோதமாக மேற் கொண்டிருந்தனர். இவ் அணியினர் பெற்ற மொத்த விருப்பு வாக்குகளைக் கூட்டினாலும் ஒரு ஆசனத்தை வழங்கமுடியாத நிலைக்கு மக்கள் அவர்களுக்கு வாக்களித்திருந்தனர். தேர்தல் தினத்தின் மாலைவரை களைகட்டியிருந்த சிராசின் அலுவலகம் தேர்தல் முடிவுகள் வெளியாகத் தொடங்கிய நேரத்திலிருந்து வெறிச்சோடத் தொடங்கி, தேர்தலுக்கு மறுநாள் மாலை ஆளரவம் அற்றுப் பூட்டப்பட்டிருந்தது. சட்டவிரோதமாக சைக்கிள் வழங்கிய போதும் மக்கள் வழங்கிய தீர்ப்பு சலுகைகளுக்கு அடிபணியும் ஏமாளிகள் அல்லர் தமிழர்' என்பதைப் பறை சாற்றியிருந்தது.



வேலை வாங்கிக் கொடுத்தவனுக்கே ஆப்பு வைச்ச சனம் வெறும் "இரும்பு"ச் சைக்கிளுக்கா மசியும்

## மதில்களை நிறைத்தோர் மனங்களை நிறைக்கவில்லை

சுவர்களில் இடம் பிடித்தவர்கள் பலரும் மக்கள் மனங்களில் இடம் பிடிக்கவில்லை. வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு மாகாண சபை கதிரைகளில் இடம் கிடைக்கவில்லை. கட்சித் தாவி குத்துக்கரணம் அடித்தோர் மக்களால் இனம் கண்டு ஒதுக் கப்பட்டனர். அரச படையினரின் ஆதரவைப் பெற்றவர்களின் பசப்பு வார்த்தைகளுக்கு மக்கள் விலை போகவில்லை. அரச ஊழியர்களைப் பயன்படுத்தியும் வேலைதேடும் இளையோரை வழி தவறவைக்க முயன்றவர்களும் தமது போலி வேடங்களை களைவதற்கான ஓர் சந்தர்ப்பமாக மக்கள் தேர்தல் முடிவுகளால் பதில் அளித்துள்ளார்கள். சண்டித்தன அரசியலுக்குச் சாவுமணி அடித்துள்ளனர் மக்கள். இவர்களது சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும், பத்திரிகை விளம்பரங்களும் தம்மைத்தாமே ஏமாற்றும் வேலை என உணர மறுத்ததன் விளைவு, மக்கள் அவர்களை மறுதலித்துள்ளனர்.



மாகாணசபைத் தேர்தல் பற்றிய நமது முரசொலியின் பார்வை

—— நயனன்

# பனை மரம் பற்றிய ஓர் பார்வை

திருமதி சுபாஷினி பிரணவன்

"பொன்னி மழை வாழி பூமி நலன் வாழி
மன்னுயிர்கள் வாழி யறம் வாழி – எந்நாளும்
கற்பகம் போலீயும் கடவுட் பனை வாழி
நற்றமிழும் வாழி நயந்து"

என நவாலியூர் சோமசுந்தரப் புலவர் வாழ்த்துகின்ற பனை மரம் பற்றி ஒரு தடவை நினைக்கின்றபோது ஓராயிரம் செய்திகளை அறிந்து கொள்ளலாம்.

பொதுவாக, மரம் என்று தமிழில் வழங்கப்பட்டாலும் மரவகையைச் சாராத புல்லி னத்தைச் சேர்ந்த ஒரு தாவரப் பேரினமே பனை ஆகும். (Palmyra pala) "கற்பகதரு" என அழைக்கப்படும் பனையைத் தற்காலத் தாவரவியல் அடிப்படையில் மட்டுமன்றி தமிழ் இலக்கண மரபுகளின் படியும் பனை மரம் எனக் கூறுதல் தவறாகும். தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் புல்லையும், மரத்தையும் பின்வருாறு வேறுபடுத்துகிறது.

"புறக் காழனவே புல்லெனப் படுமே (பாடம் 630)
அகக் காழனவே மரமெனப் படுமே (பாடல் 631)

பல வகையான பயன்களைக் நெடுங்காலத்திற்குத் தருவதால் பனையைக் கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்து மரம் எனவும், தொன்மங்கள் கூறும் கற்பகதரு எனவும் ஒப்பிடப்படுகிறது.

தொல்காப்பியம், திருக்குறள் உள்ளிட்ட சங்க இலக்கியங்கள் எல்லாவற்றிலுமே பனை பற்றி கூறுப்பட்டுள்ளது. அது தரும் பதநீரும் கள்ளும் பல பாடல்களில் பலவாறும் புகழப்ப ட்டுள்ளது. பனை ஓலை ஏட்டிலேயே நூல் எழுதினார்கள் என வரலாறு கூறும் செய்தியையும் நாம் அறிகிறோம். முற்காலத்தில் பிறப்பியக் கணியம் எழுவோரும் ஏட்டிலே தான் எழுது வார்களாம். ஏறத்தாழ பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான பேரிலக்கியம், சிற்றிலக்கியங்களெல்லாம் ஏட்டிலேதான் எழுதப்பட்டன. பனையோலை ஏட்டில் எழுதப்பட்ட புத்தகத்தை அழகுறச் சொல்லும் பழைய பாடல் பற்றி தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகிறது.

"எழுதுவரிக் கோலத்தார் ஈவார்க்குரியார்
தொழுதிமைக் கண்ணனைந்த தோட்டார்
முழுதகலா
நானிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்
பேணற் கமைந்தார் பெரிது"

(தொல். சொல் 449 சேனா உரை)

தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் "நட்டாயிரம் பட்டாயிரம்" என்னும் பழமொழிக்கு இலக்காக விளங்கும் பனையின் பயன் பற்றி (தாலவிலாசம்) பனைக்காவியம் என்ற இனிய இலக்கியத்தை தமிழ் மக்களுக்காகத் தந்துள்ளார். அதில் பனையின் எண்ணூற் றொரு பயனை எடுத்தியம்புகிறார்.

"அண்டர்கள் நுங்கினை உண்டறிந்தால்
முன்னம் அமுதங் கடைந்திடார் ஞானப் பெண்ணே" அதாவது தேவர் நுங்கின் சுவையறிந்திருப்பார்களானால் திருப்பாற்கடலில் அமுதம் கடைய முற்பட்டிரார் என அமுதத்தைவிட நுங்கின் சுவையைப் புகழ்ந்திருத்தலைக் காணலாம்.

தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்துள்ள பனையானது யாருடைய பேணு கையும் இல்லாமல் வளர்வது. எந்தக் கொடிய கோடையையும் தாங்கி உயர்ந்து வளர்வது. தனித்து நின்றாலும் தளர்வறியாதது. வயிரம் செறிந்தது. உறுதியானது. வீரமுள்ளது. அதனாற்தான் சேரமன்னர்கள் பனந்தோட்டு மாலையை அணிந்து கொண்டனர். மகாபாரதத்தில் வீரராகக் காட்சி தரும் பலராமரும் வீஷ்மரும் தம் வெற்றிக் கொடியில் பனை யைச் சின்னமாகக் கொண்டனர். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது என்று வீரம் பேசு வோர்க்கும் பனையின் உறுதியே அவர்களது உள்ளத்து உறுதியை வெளிப்படுத்த உதவு கிறது. உலகில் பனைக்கு நிகராகச் சொல்ல எந்த மரமுமே இல்லை என்ற உண்மை யாரும் மறுத்துவிட முடியாதவொன்று.

மட்டுமன்றி, பனை என்பது ஒரு அடையாளம் கிராமங்களின் கம்பீரம். தாவரங்களின் சாம்ராஜ்யம்.

"செப்பஞ் செய் யாழ்ப் பாணமுடன்
தென்றமிழ் நாட்டின்
வெப்பஞ் செய்யும் ஒப்பு நிலத்து
மேவிடுவார்
துப்பிற்கென்றே தோன்றிய அன்னே
சுவையீய
அப்புத்தேடிப் பாதலஞ் சேறல் அளியன்றே
பனைநூறு

தமிழ்ப் பெருங்குடிகளின் வாழ்விடங்களை அடையாளம் காட்டி அலங்கரித்து நிற்பது பனைமரம். சோழருக்கு அத்திப்பூ. பாண்டியருக்கு வேம்பம்பூ. சேரர்களுக்கு அடையாளம் பனம் பூவே.

தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து அவர்களின் வாழ்விற்கு வழிகாட்டி வரும் தேசிய சொத்தாகப் பனை காணப்படுகிறது. தமிழ் மக்களின் அடையாளத்தை, அவர்களின் அக வாழ்வு நிலையிலும் புறவாழ்வு நிலையிலும் நெருக்கமான பிணைப் பினைக் கொண்ட மைந்த தன்மை யினையும் பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்தும் போந்தை (பனை) தாலமும், (பனை) தமிழனும் தலை வணங்காத் தன்மையில் ஒத்தவர்கள் என ஒப்பிட்டுக் கூறப்பட்ட புற்பதி (பனை) என (பனை செல்வம் பக்கம் 218 பேராசிரியர் சு.மோகனதாஸ்) (திரு.வி.சி.தங்கவேல்) நூலில் காணக் கிடைக்கின்றது.

பனையின் சிறப்பு பற்றித் தமிழிலும், ஆங்கிலத்திலும் அநேக நூல்களிற் காணக் கூடியதாக உள்ளது. சித்தர்கள் தங்கள் மருத்துவக் குறிப்பில் பனைமரங்களைப் பற்றி எழுதியு ள்ளார்கள். பல ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பே அதியமானும், ஔவை யாரும் கள் குடித்து மகிழ்ந்த காட்சி கள்கூட சங்க இலக்கியங்களில் வர்ணிக் கப்பட் டுள்ளன. கள் என்பது பனையின் தாய்ப் பால். செயற்கை யான உரங்களோ பூச்சிக் கொல்லி மருந்துகளோ ஆராய்ச்சி யாளர்களால் பயன் படுத்தும் அவசியம் பனை மரங்களுக்கு மட்டும் ஏற்படவில்லை.

(தொடரும்...)

# தேர்தல் கால அறிவுப் பலகை

## விக்கி ஐயா கேட்டதை கொடுத்தனர் மக்கள்! மக்கள் கேட்பதை அவர் பெற்றுக் கொடுப்பாரா?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட நீதியரசர் விக்னேஸ்வரன் பிரச் சாரக் கூட்டங்களில் மேடைகள் தோறும் கூட்டமைப்பு 30 ஆசனங்களைப் பெறவேண்டும். அப்போது தான் 'எமது இன விடுதலைப் போராட்டத்தை இலக்கை வெற்றி நோக்கி நாம் இராஜதந்திர வழியில் நகர்த்த முடியும்' என தெரிவித்து வந்தார். இந்நிலையில் தமிழ் மக்கள் தமது தீர்ப்பாக தம் ஆணையைத் தெளிவாக வழங்கியிருக்கின்றார்கள். எனவே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றதைத் தன் திறனினால் விக்கினேஸ்வரன் பெற்றுத் தரவேண்டும் எனும் எதிர்பார்ப்பும் வலுப்பெற்றுள்ளது. அவர் அதனை நிறைவேற்றுவார் என எதிர்பார்ப்போமாக.

## முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் செயலாளராக அதிகாரி ரங்கராஜன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண அரசின் முதலமைச்சரின் செயலாளராக முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் செயலாளராகக் கடமையாற்றிய எஸ்.ரங்கராஜன் நியமிக்கப்படவுள்ளார் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. திட்டமிடற் சேவையைச் சேர்ந்த அதிகாரியான ரங்கராஜன் மாகாண சபையின் செயலாளராக இருந்தவேளையில் அவரது பெருமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பினால் பல்வேறு திட்ட முன் மொழிவுகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்தியுமிருந்தார். செயலாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் வடக்கு ஆளுனரின் செயலாளராகச் செயற்பட்ட அவர் தொடர்ந்தும் அப்பதவியில் நீடிக்க விருப்பமற்று, விலகி பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்ததுடன் தமிழ்த் தேசியம் சார் நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் செயலாளராக அவர் நியமிக்கபட்டதன் மூலம் அவரது திறனை வடக்கு மாகாண சபை பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புக் கிட்டியுள்ளது.

## மாகாண சபைக்கு மக்கள் ஆணை

பிராந்திய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் அதிகம் கவனிக்கப்பட்ட வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியுள்ளது. 38 ஆசனங்களைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் 30 ஆசனங்களைத் தனதாக்கி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமாகப் பெற்று அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது கூட்டமைப்பு. முள்ளி வாய்க்காலில் முடிந்துபோன தமிழர்களின் ஆயுதப் போராட்டம் இராஜதந்திரப் போராக உருவெடுத்து, விஸ்வரூப வெற்றிபெற்றுள்ளது' என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



எங்கு போர்முடிந்து, தமிழர்கள் தோற்றுப் போன இன மென எதிர்த்தரப்பு மார்தட்டியதோ அதே முல்லைத்தீவின் மாவட்ட தேர்தல் முடிவுகளே முதலில் வெளியிடப்பட்டு தமிழர் வெற்றி உறுதி செய்யப்பட்டமை மீண்டும் தொடங்கும் மிடுக் கென புது உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. முல்லைத்தீவு மாவ ட்டத் தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் முதலில் இரவு 8 மணிக்கு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து வெளி யிடப்பட்ட முடிவுகள் அனைத்தும் கூட்டமைப்புக்கு அமோக வெற்றியை அள்ளித் தந்த இனிப்புக்களாக அமைந்தன.

சலுகையா? உரிமையா? என எழுந்த கேள்விக்கு, உயிரை இழந்தோம் உடமை இழந்தோம் உணர்வை இழக்க வில்லை, உரிமையையும் இழக்கோம் என தெட்டத் தெளிவாக தங்கள் பதிலைத் தென்னிலங்கைக்கும், சர்வதேசத்துக்கும் உரத்துச் சொல்லியிருக்கின்றார்கள் தமிழர்கள்.

இந்த முடிவுகளை தமிழர்களின் ஏகோபித்த முடிவாக ஏற்றுக்கொண்டு சர்வதேசம் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு நியாயமான தீர்வினைப் பெற்றுத்தரும் எனும் நம்பிக்கையில் காத்திருக்கின்றனர் தமிழ்மக்கள்.

# கங்கு

"கங்கு மட்டை" 1971இல் ஈழநாடு 10ம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதை. ஈழத்து இலக்கியத்தின் ஒரு முகவரியாக அறியப்பட்ட செங்கை ஆழியானின் படைப்பு. செங்கை ஆழியான் க.குணராசா அவர்களின் இலக்கியப் பணியினை கௌரவிக்கும் வகையில் காலத்தால் அழியாத இப்படைப்பினை நமது முரசொலி மீள்பிரசுரம் செய்கின்றது.

சோளகக்காற்றின் வேகமான வீச்சால் பனை மரங்கள் சரசரத்து ஆடின. உடுக்கின் லயந்தப்பா ஒலிக்கு இணங்க, கலை கொண்டு தலைவிரித்தாடும் பெண் போலப் பனைமரங்கள் ஆடின பிடிப்பிழக்கத் தயாரான நிலையில் காய்ந்து செத்துக் கிடந்த காவோலைகள் இறுதிப் பற்றுதலோடும் மரத்தோடும் தம்முடனும் மோதிச் சோளகக் காற்றின் வீரியத்தைப் புலப்படுத்தின. மெல்லிய மழைவேறு ஓயாது தூறிக் கொண்டிருந்தது.

இடையிடையே பனைஓலைகளும் கங்கு மட்டைகளும் சுழன்றடித்தபடி நிலத்தில் விழுகின்ற ஓசைகள் எழுந்து மடிந்தன.

சின்னாச்சிக்கிழவர் கனத்த கம்பளி ஒன்றினால் நன்கு போர்த்தபடி வீட்டுத்திண்ணையில் வந்தமர்ந்து சோளகக்காற்றின் அமர்க்களத்தைப் பார்த்துக் கொண் டிருந்தார். அவருடைய கைகள் நாட்டுப் புகையிலை ஒன்றைக் கிழித்து நரம்பு நீக்கிச் சுருட்டுவதில் ஈடுபட் டிருந்தன. கண்கள் வெளியே எங்கோ அர்த்தத்துடனோ இன்றியோ நிலைத்துப் பார்த்தன.

இரண்டு நாட்களுக்கு முன்தான் அவர் படுக் கையில் கிடந்து எழும்பினார். பத்து நாட்களுக்கு மேல் அறிவு நினைவற்றுப் படுக்கையில் கிடந்தார். அந்த வருத் தத்தால் தோன்றிய பலவீனம் முற்றாக நீங்கிவிடவில்லை திண்ணையில் குந்தியிருக்கும் போது முதுகெலும்பு வலித்தது.

இது ஒரு மறுபிறப்பு போல அவருக்கு இருந்தது. அவள் மட்டும் இல்லாதிருந்தால் இன்று நான் எங்கே என்று அவர் கூறிக்கொண்டார்.

முதுமை குடிகொண்ட அவர் உடல் மெதுவாக நடுங்கியது. எனினும், கண்களின் தீட்சண்யம் மங்கி விடவில்லை.

எல்லாப் புலன்களும் ஒன்றில் நிலைக் கவில்லை. அவரைப் பொறுத்த வரையில் அவை அப்படி நிலைக்க வேண்டிய அவசியமுமில்லை. எல்லா வற்றையும் ஒரே நேரத்தில் கிரகித்துக் கொள்ளக் கூடிய திறன் அவருக்கு இருந்தது.

சின்னாசிக்கிழவர் ஏனோ சிரித்துக் கொண்டார்.

அவருடைய பெயர் பொன்னம பலப்பிள்ளை – ஆனால் அந்தப் பெயர் அவருக்கு நிலைக்கவில்லை. மனைவியின் பெயரோடு ஒரு கிழவரையும் சேர்த்து ஊரார் சின்னாச்சிக்கிழவர் என்று அழைத்தார்கள். அப்பெயரே நிரந்தர மாகிவிட்டது.

பொன்னம்பலப்பிள்ளை என்ற பெயரை அவருக்கு ஆசையோடுதான் ஆச்சி வைத்தாள். ஆனால் வீட்டில் அவளும் அப்வும் அவரை "பெரியதம்பி" என்றே அழைத்தார்கள். திருநெல் வேலி என்ற தின்ன வேலியிலேயே முதன் முதல் ஓட்டுவீடு கட்டியவர் பொன் னம்பலப்பிள்ளயையின் தந்தையார்தான்.

ஆசையோடு ஆச்சி வைத்தபெயர் சிறுவயதில் கூட அவருக்கு நிலைக்காது போய் விட்டது.

கலியாணத்திற்குப் பிறகாவது அவருடைய பெயர் விழங்கியதா என்றால் அதுவுமில்லை. சின்னாச்சி அம்மானை அவர் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்ட காலத் தொடக்கத்தில் கூட "ஓட்டுவீட்டுத் தம்பி பெரியதம்பி" என்ற பெயர்களே வழங்கின. மூன்று குழந் தைகளுக்குத் தகப்பனாகிய பிறகு அவர் "சின்னாச்சி க்கிழவர்" என்ற கௌரவப் பட்டத்தைப் பெற்றார்.

அந்தப் பெயரே நிலைத்துவிட்டது. என்றாலும் பொன்னம்பலப்பிள்ளை என்ற பெயர் இடையிடையே வழங்கத்தான் செய்கிறது. கொழும்பிலிருந்து மூத்த மகன் சிவசுப்பிரமணியம் எப்போதாவது மணியோடர் அனுப்பும் போதோ, சிலாபத்திலிருந்து இளையமகள் பூரணி எப்போ தாவது கடிதம் எழுதும் போதோ முகவரியில் பொன்னம் பலப்பிள்ளை என்றே குறிக்கிறார்கள்.

தபால்காரர், சின்னாச்சிக்கிழவர்தான் பொன் னம்பலப்பிள்ளை என்று தெரியாது அலைந்து திரிவது வேறு கதை.

மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை வீடு வீடாக ஏறி இறங்கி வாக்குப்பிச்சை கேட்கிறவர்களும் "பொன்ன ம்பலப்பிள்ளை" என்று அழைத்துக் கொண்டே வருகிறார்கள். பணம் கொடுத்து வாங்கிய காலத்திலும், பணம் கொடாமல் வாங்குகிற காலத்திலும் அரிசி பெற உதவும் கூப்பனிலும் "க.பொன்னம்பலப்பிள்ளை" என்றே பெயர் இருக் கிறது.

மற்றையபடி அவர் சின்னாச்சிக்கிழவர் தான்.

அவருடைய பெயர் வழங்காமல் வேறு பெயர் களில் அவரை அழைப்பாதற்குக் காரணம் இல்லாம லில்லை. பெற்றோருக்கு அடங்கிய பிள்ளை, மனை விக்கு அடங்கிய கணவன், பிள்ளைகளுக்கு அடங்கிய தந்தை என்பவை தான் அவர் வாழ்க்கைச் சுயசரி தையின் மூன்று பெரும் பாகங்கள்.

அவர் இயக்கப்படுபவர், இயங்குபவர் அல்லர்

அவர் பெற்றோருடன் இருக்கும்போது அவரை ஊரார். "தாய் தேப்பனுக்கு அடங்கிய பிள்ளை... தாய் தேப்பனாரை சொல்லை மீறாது..." என்றார்கள்.

"உண்மைதான்" என்று சின்னாச்சிக்கிழவர் இப்போது தலையை ஆட்டிக்கொண்டார்.

சோளக்ககாற்று வீசிக்கொண்டிருந்தது. மழை யும் தூறிக்கொண்டிருந்தது. கொட்டிப் பொழிகின்ற மழை யைக் கண்ணிமைக்காமல் பார்ப்பதிலும், நுரைபரப்பி விரைகின்ற வெள்ளத்தைப் பார்ப்பதிலும் அவருக்கு மிகுந்த ஆசை, சிறுவயதில் வெள்ளத்திடையே நீர் ஏற்றி யபடி விரைந்து ஓட அவருக்கு ஆசைதான். ஆனால், அந்த ஆசை நிறைவேற முடிவதில்லை.

தாழ்வாரத்தில் நின்று மழைத்தாரைகள் வெள்ளிக் கம்பிகளாக இறங்குவதைப் பார்த்துக்கொண்டு நிற்பார்.

"பெரியதம்பி....! என்று அப்புவின் குரல் இடியாக முழங்கும். "உள்ளுக்கு வந்திரு...."

மறுத்து நிற்க அவருக்குத் துணிவிருக்காது. சொல்வதும் சரிதான் என்றும் மனதிற்படும்.

ஒரு சம்பவத்துணுக்கு இன்றும் பசுமை மாறா மல் அவர் நினைவில் இருக்கிறது.

நான்கு நாட்களாக மழை ஓயாது பொழிந்ததால் வளவெல்லாம் வெள்ளம், முழங்காலளவிற்குத் தேங்கி நின்றது. அந்த வெள்ளத்தினூடே நடந்து திரியவேண்டும் என்ற ஆவல் அவருக்கு, ஆச்சியும் அப்புவும் தடையாக இருந்தனர்.

ஒரு நாள் பக்கத்து வீட்டுக் கிழவிக்கு வருத்தம் கடுமையென்று ஆச்சியும் அப்புவும் போய்விட்டார்கள். வீட்டில் அவரும் அவரது ஒரே தங்கை பாக்கியமுந்தான்.

அவர் காலாற, மனமாற வெள்ளத்தினூடே நடந்து திரிந்தார். எவ்வளவு குளிர்மை? எவ்வளவு இனி மை? ஆச்சியும் அப்புவும் திரும்பி வந்தபோது பாக் கியம் உண்மையைக் கூறிவிட்டாள். அவர் செய்யாத ஒன் றையும் கூட்டிக்கூறிவிட்டாள்.

"அப்பு ...... அண்ணை வெள்ளத்துக்குள் திரி ந்தவர். வெள்ளத்துக்கை குளிச்சவர்..."

அப்பு எரிமலையெனக் குமுறினார்.

"டேய் பெரியதம்பி.....!

சர்வமும் ஒடுங்கிப் போய், பலிபீடத்திற்கு வரும் உயிராக, அப்புவிற்கு முன்வந்து நின்றார். அப்புவின் கை யில் அகப்பட்டது இரட்டை மாட்டு வண்டித் துவரம் கம்பு தான். "பளார்" என்று ஒரு விளாசல், அவரின் முதுகுச் சதை பிளந்து கொண்டது.

அன்றைய அடியோடு அவர் எவ்வளவோ மாறி விட்டார். பெற்றார் கூறியவை அவருக் குத் தேவவாக்கு. தனக்கு என்று ஓர் உணர்வை அவர் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. சிலவேளைகளில் மறுத்துக் கூறமனந் துடித்தாலும், முதுகில் நிரந்தரமாகத் தங்கி விட்ட பிரம்படி வடுவும் அவர்கள் சொல்வது சரிதான் என்ற உணர்வும் தடுத்தன.

அப்புவோடு தோட்டத்திற்குப் போவார். சில வேளை களில் தண்ணீர் இறைப்பார். வரம்பு கட்டுவார். அதிலேயே அவர் சுவை கண்டார். அவரை ஒத்த பையன் கள் சினிமா, திருவிழா, கூட்டம் என்றெல்லாம் திரிவதைக் கண்டாலும், இவருக்கு அவற்றில் நாட்டம் ஏற்பட வில்லை. ஏற்பட்டாலும் ஏதோ ஒருவித பயம் தடுத்தது.

அவரிலும் பார்க்க நான்கு வயது குறைந்த தங்கை பாக்கியம் கூட அவரை அடக்கி ஆண்டாள்.

"உனக்கு ஒன்றும் தெரியாது.... நீ சும்மா இரு அண்ணை!' என்று அவள் உறுக்கினால் போதும் அவர் பேசாது அடங்கி விடுவார். அவருக்கும் எதுவும் தெரியா தது போலவே இருக்கும்.

அவர் கலியாணம் செய்து கொண்ட பிறகு அவ ரை ஊரார். "பெஞ்சாதிக்கு அடங்கிய மனிசன். அவள் கீறின கோட்டைத் தாண்டாது" என்று கூறிக்கொண் டார்கள்.

'உண்மைதான்'

அவளுடைய பத்தொன்பதாம் வயதில் அவரு க்கு கலியாணம் நடந்தது. கலியாணப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது என்னவோ அவருக்குத் தெரி யும். "பாக்கியத்திற்காக்கும்" என்று பேசாது இருந்து விட் டார். திருமணப்பேச்சு வார்த்தைகள் நடந்து முடிந்து நாள் வைத்த பின் தான் அப்பு அவரைக் கூப்பிட்டார்.

"பெரியதம்பி உனக்கு வருகிற புதன்கிழமை கலியாணம்...."

எங்கு, எப்படி என்ற விபரங்கள் அவருக்குத் தெரியாது யார் மணப்பெண் என்பதும் அவருக்குத் தெரி யாது. கேட்டு அறிவதற்கு விருப்பம் இருந்தது. ஆனால் முடியவில்லை.

அவருக்கு என்று ஒரு ஆசை, விருப்பம் இல் லையா?

பக்கத்துத் தோட்டத்தில் அதிகாலை வேளை களில் தகப்பன் துலாமிதிக்க, நீரிறைக்கும் ஓர் இளம் பெண்ணை அவர் கண்டிருக்கிறார். அவளது அழகு அவரைக் கவர்ந்துதுான் இருந்தது. அவளைத்தான் அவ ருக்கு மனைவியாக்கப் போகின்றார்களோ? அப்படி யாயின் எவ்வளவு நன்றாக இருக்கும்?

ஆனால், அவருக்கு மனைவியாக வந்தவள் வேறொருத்தி சின்னாச்சி அம்மாள்.

சின்னாச்சியைப் பொறுத்த அளவில் அவருக்கு நல்ல அபிப்பிராயம். அவள் மிகவும் கெட்டிக்காரி. குடும் பத்தை நிர்வகிப்பதில் அவளுக்கு இணை அவள் தான். அவருக்கு என்று ஒரு பொறுப்பையும் விடாது அவளே யாவற்றையும் நிர்வகித்தாள்.

'இந்த முறை புகையிலையை எனக்குத் தந்திடு ங்கோ..' என்று பட்டணத்திலிருந்து வந்த வியாபாரி கேட்பார்.

'அவவைக் கேளுங்கோ' என்பார் அவர்.

'உங்கடை மகனின் சாதகத்தைத் தாருங் கோவன் ஒரு பெண் பார்ப்பம்' என்று வருவார் தரகர்.

'அவவைக்கேளுங்கோ.....'

'ஒரு நூறு ரூபா இருந்தால் கடனாகத் தாருங் கோ. மூன்று நாளிலை திருப்பித்தாறன்' என்று பக்கத்து வீட்டுக் கந்தப்பர் வருவார்

அவவைக்கேளுங்கோ என்பார் அவர். கால கதியில் அப்படிக் கூறவும் வேண்டிய தேவை இல்லாமல் போய்விட்டது. எல்லோரும் அவரை எதுவுமே கேளாது சின்னாச்சியையே கேட்டார்கள்.

சின்னாச்சியும் அவரை ஒன்றுக்கும் கேட்ப தில்லை

அவருக்கு என்ன தெரியும் என்ற நினைவு. அவராகவே ஏதாவது செய்ய முயன்றாலும், 'நீங்க சும்மா இருங்கோ நானே செய்யிறன்' என்பாள். மறுத்துக்கூற அவருக்குத் துணிவிருக்காது. 'எனக்கு என்ன தெரியும்' என்று எண்ணிப்பார்ப்பார்.

மழை ஓய்ந்து சற்று வானம் வெளுத்தது போல இருந்தது அவர் சுருட்டைச் சுவைத்துச் சுவைத்துப் புகைத்தார். முதுகுத்தண்டு வலியை தந்தது.

வளவு முழுவதும் பனை மட்டைகளும், கங்கு மட்டைகளும், பன்னாடைகளும் குவிந்து கிடந்தன. ஐந்நூறு பனைகளுக்கு மேல் நின்ற காணி அது. இன்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.

அவருடைய கண்பார்வை பதியக்கூடிய தூரத்தில் தான் காணியைப் பிரிக்கும் பனைமட்டையால் வரிந்த வேலி இருக்கிறது. ஆங்காங்கே மட்டைகள் உக்கி விலகியிருந்தன. தென்மேற்கு மூலையில் மழைக்கும் காற்றுக்கும் தாக்குக் கொடுக்க முடியாத வேலி உட்புற மாகச் சாய்ந்து கிடந்தது.

பாசத்தையு் பிரித்து வைத்திருப்பது அந்த வேலைதான்.

சின்னாச்சிக்கிழவர் பெருமூச்சொன்றை வெளி ப்படுத்தினார். காலம் எவ்வளவு மாற்றங்களை ஏற்படுத்தி விடுகின்றது. நேற்றுப்போல இருக்கிறது. இந்தப் பனை வளவு முழுவதும் அவரும் பாக்கியமும் ஓடித்திரிந்து கங்கு மட்டைகள் பொறுக்கி அடுக்கியமை இன்று ஓட முடிகிறதா?

வேலிக்கு அப்பால் யாரோ ஒரு கிழவி பனை மட்டை களைப் பொறுக்கி அடுக்கிக் கொண்டிருப்பதை அவர் கண்டார். பாக்கியம் கூடக் கிழவியாகப் போய் விட்டாள். மெலிந்து, கறுத்துத் தள்ளாடிப் போனாள். ஒரு காலத்தில் 'அண்ணை நீ சும்மா இரு' என்று தன்னை உறுக்கிய சிறுமி பாக்கியமா இவள்?

காலம் எவ்வளவு கொடுமைகளைச் செய்து விட்டுக் கழிகிறது.

பாக்கியம் மட்டைகளைப் பொறுக்கி அடுக்கு வதைக் காண அவருக்கு ஏக்கமாக இருந்தது. இந்தக் காத்துக்கையும் மழையுக்கையும் உதுகளைப் பொறுக்க வேணுமே?

பனைமரங்கள் காற்றில் சிலிர்த்தன.

காணி பிரிக்கும் போது பாக்கியத்தின் வளவில் நின்றிருந்த பனைகள் இப்போது இல்லை. அரைப் பங் கிற்கு மேல் தறிக்கப்பட்டு விட்டன. அவளுடைய பிள்ளைகள் வீடு கட்டுவதற்கெனத் தறித்துக் கொண்டு போன பனைகள் தாம் எத்தனை?

பாக்கியத்தின் வீட்டில் ஒவ்வொரு முறையும் பனைதறிக்கும் போது சினன்னாச்சி கிழவருக்குத் தன்னையே தறிப்பது போல உணர்வு பிறக்கும். பனை யின் மீது இறங்குகின்ற ஒவ்வொரு கோடரி வெட்டும் தன் மீது விழுவது போலத்துடிப்பார்.

அவருக்குப் பிடியாத ஒன்று உண்டென்றால் அது பனைகளைத் தறித்து வீழ்த்துவதுதான். பனை யிலிருந்து கிடைக்கின்ற பயன்களைக் கொண்டே வாழ்க்கை நடாத்துகின்ற பலரை அவர் கண்டிருக்கிறார். கூப்பன் அரியும் அமெரிக்க மாவும் சீனியும் மனிதரின் வாழ்வைச் சோம்பேறியாக்கி விட்டன. அவர் அறியத் தக்கதாக சுற்றாடலில் இருந்த பனங்காணிகள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டன. பாழ்வெளிகளாக அவை இன்று கரடு பற்றிக் கிடக்கின்றன.

பாக்கியம் இப்போதும் பொறுக்கிக்கொண்டிருந்தான். தங்கையை அவர் மனம் ஏசு வதற்கு அவருக்குத் துணிவில்லை

எப்படிப் பேசுவார்?

நாற்பது ஆண்டுகளுக் ணப்படுக்கையில் கூறியவை வைதாமா?

'பெரியதம்பி உவளா போகிறேன். எனக்கு என்று அவளாலை என் மானம் மரியா போச்சுது.. அவளை எப்படி போகட்டும்... எல்லாம் போகட் ஒன்று பெரியதம்பி! அவளோடு சகவாசம் வைக்ககூடாது பேசக்

அப்புவின் வார்த்தை மாட்டார்.

அவரும் பாக்கியமும் ஆண்டுகள் ஆகின்றன? அவ வயதிற்குப் பின் அவளோடு இல்லை... இல்லை மூன்று த க்கிறார். நாற்பது ஆண்டுகளில் மூன்றே தடவைகள் பேசியிருக்கி

அந்த நாட்கள்

வெளியே பழையபடி பட்டது வானமும் அழத்தொடங் சுருட்டை வீசி எறிந்து விட்டு மூட்டினார். இந்தக் குளிருக்குச் தான் நன்றாக இருக்கும்.

தனக்குத்தானே சமை அவராகவே ஏற்றுக் கொண்ட பிள்ளைகளில் இரண்டாவது போனான். மற்றைய இருவரும் நல்லாக இருந்கி றார்கள். அவர் ரைப் பல தடவைகள் வருந்தி மறுத்துவிட்டார்.

தான் பிறந்து வளர்ந்த விட்டு அவர் போவதா?

அடுப்புப் பற்றி எரியு வருக்கு அந்த நாட்களே நி வந்தன. பாக்கிய அவர் பேசிய சந்தர்ப்பங்கள்

சந்தைக்கு விட்டு அவர் திருப் கொண் டிருந்தார். ஒரே அசதி. ச திரும்பும் போதுதா களை எதிரில் கண்

அவள் க ருந்தாள். அவனைப் ப பிடிக்கவில்லை. ஒன்றும் அ ஏமாற்றிக் கூட்டிச் சென்றவன் என்னத்தைக் கண்டு இவள், த வளவு எல்லாவற்றையும் துறந் ஊரில் பெயர் பெற்ற கனக கண்டாள். அவனிலும் பார் ஒருவனை இவளுக்குத் கணவ

'அண்ணை' என்று அவர் அவளை நிமிர்ந்து பா கலங்கித் தவித்தன. அவர் எ ஒதுங்கிப் போக முயன்றார்.

'அண்ணை நீயுமா எ

பாக்கியத்தின் இவ்வ வைத்தன. 'அவளோடு நீ இல கூடாது' என்று அப்பு சத்திய நினைவுக்கு வந்தன. மானத்தி அப்புவின் மகன், மானத்ை பேசுவதா?

அவர் அவளை ஏளன

'உன்னோடு எனக்

அவர் வந்துவிட்டார். சூடாகத் தேநீர் கலக்கி எ திண்ணைக்கு வந்தார். பாக் வீட்டிற்குள் போய்விட்டாள் போ

அவளுடைய வீட் வேகமாக அசைந்து ஆடின முன்பே ஓலைகள் வெட்டுவிக் முறை ஓலைகளை வெட்டுவி பனைகள் அசைந்து ஆடி எப்போதோ ஓலைகளை வெ மட்டைகள் கூட இப்போது கியுள்ளன.

அவளுக்கு யார் காலத்தில் காரியங்களைச் செ எவர் உள்ளனர்? கணவன் மூத்த மகனோ போன இடர் ஒருத்தி கூட இருக்கிறாள். வேற

'பளார்' என்ற சத்தத் ஏதோ விழுந்தது. காங்கும பக்கத்தில் விழுந்து கிடந்தது தள்ளி விழுந்திருந்தால் சின் தான்.

# மட்டை

...ப்போதும் பனைமட்டைகளையே
...ந்தான். "விசர் பெட்டை" என்று
...ணம் ஏசுகிறது. நேரில்போய் ஏசு
...னிவில்லை.
...வார்?
...ண்டுகளுக்கு முன் அவரது அப்பு மர
...றியவை மறந்து விடக் கூடிய

... உவளாலை தான் நான் சாகப்
... என்று மகளாகப் பிறந்தாளே?
...ாம் மரியாதை எல்லாம் நாசமாய்ப்
... எப்படி எல்லாம் வளர்த்தன்...
...ம் போகட்டும். ஆனால் உனக்கு
...அவளோடு நீ இந்தப் பிறப்பிலை
...து பேசக்கூடாது"
...வார்த்தைகளை அவர் மீறவே

...க்கியமும் பேசித்தான் எத்தனை
...ன? அவளுடைய பதினேழாவது
...வளோடு அவர் பேசவில்லை.
...மூன்று தடவைகள் அவர் பேசியிரு
...ண்டுகளில் பாக்கியத்தோடு அவர்
...சியிருக்கிறார்.
...ள்
...ழையபடி காற்றின் வேகம் தலைப்
...தொடங்கியது. சின்னாச்சிக் கிழவர்
... விட்டு உள்ளே போய் அடுப்பை
...ரிருக்குச் சூடாக ஏதாவது குடித்தால்
...ம்.
...னே சமைத்துச் சாப்பிடும் பொறு ப்பை
...கொண்டார். அவருடைய மூன்று
...டாவது மகன் அகாலமாக இறந்து
...இருவரும் குழந் தையும் குட்டியுமாக
...ள். அவர்கள் ஒவ் வொருவரும் அவ
... வருந்தி அழைத் தார்கள். அவர்

...வளர்ந்த வீட்டையும் காணியையும்

...றி எரியும்போது சின்னாச்சிக் கிழ
...ளே நினைவில்
...பாக்கிய த்தோடு
...பேசிய மூன் று
...கள்
...தைக்குப் போய்
...ர் திரும்பி வந்து
...ருந்தார். உடலில்
...சதி. சந் தியில்
...போதுதான் அவர்
...ரில் கண்டார்.
...வள் கனகசபையோடு நின் றி
...னப் பார்க்கவே அவருக்குப்
...றும் அறியாத ஒரு பெண்ணை
...ன்றவன் அவன். கனகசபையிடம்
...இவள், தாய் தந்தை அண்ணன் வீடு
...யும் துறந்து ஓடினாள். முரடன் என்று
... கனகசபையிடம் இவள் எதைக்
...ம் பார்க்க எவ்வளவு உயர்ந்த
...ந் கணவனாக்கி இருப்போம்.
... என்று அழைத்தாள் பாக்கியம்.
...ந்து பார்த்தார். அவளின் விழிகள்
...அவர் எதுவும் பேசாது வெறுப்போடு
...றார்.
...நீயுமா என்னை வெறுக்கின்றாய்?'
...ள் இவ்வார்த்தைகள் அவரை நெகிழ
...டு நீ இனி இந்தப் பிறப்பிலை பேசக்
... சத்தியம் செய்த வார்த்தை களும்
...மானத்திற்குப் பயந்து இறந்து போன
...ானத்தை விற்று ஓடிய வளுடன்

...ள ஏளனமாகப் பார்த்தார்.
... எனக்கென்ன கதை.'
...விட்டார்.
...க்கி எடுத்துக் கொண்டு வெளித்
...ார். பாக்கியத்தைக் காணவில்லை
...ாள் போலும்.
... வீட்டைச் சுற்றி நின்ற பனைகள்
... ஆடின. சோளகம் பெயர்வதற்கு
...ட்டுவிக்க வேண்டும். பாக்கியம் இம்
...வட்டுவிக்காததால், தலைப் பார்த்தில்
... ஆடின. சின்னாரச் சிக்கிழவர்
...ளை வெட்டுவித்து விட்டதால், கங்கு
...ப்போது காய்ந்து விழத் தொடங்

... யார் இருக்கின்றார்கள்? உரிய
...ளைச் செய்வதற்கு அவளுக்கு இன்று
...ணவன் சிறையில் இருக்கின்றான்.
...ன இடந்தெரியாது. ஊமைப் பெண்
...ள். வேறு யார்?
...ற சத்தத்தோடு திண்ணையில் வந்து
...கங்குமட்டை ஒன்று அவருக்குப்
... கிடந்தது. நல்லவேளை கொஞ்சம்
...ல் சின்னாச்சிக் கிழவருக்கு மேலே

'பத்துநாள் காய்ச்சலால் சாகாதவன் இந்த மட்டையாலையா சாகப்போறன்?'

கங்குமட்டையைத் தூக்கி எறியப்போனவர் சற்றுத் தயங்கினார். அவர் கைகள் அம்மட்டையை ஏந்தி நிற்க, விழிகள் அதன் மேலேயே மொய்த்தன.

கங்கு மட்டை...

கறுத்துக் காய்ந்து பொருத்தப்பட்டுக் கிடந்த அக் கங்குமட்டையில் அவர் என்னத்தைக் கண்டாரோ? பனை ஓலையின் அடிமட்டை அது. பாளைக்கத்தியின் கூரான வெட்டியின் வாய் அதில் இருந்தது. நுனி ஒரு மட்டையாகப் பொருந்தி அடி இரு கிளைகளாக விரிந்து இருந்த அக் கங்குமட்டை அவருக்கு என்ன இரகசியங்களைக் கூறினவோ?

இத்தகைய கங்குமட்டைகளைத் தான் அவரும் பாக்கியமும் முன்பு பொறுக்கினார்கள், பாக்கியம் அப் போது சிறுமியாக இருந்தாள். உலகின் கள்ளம் புகாத வயது சிலவேளைகளில் கங்குமட்டை ஒன்றைக் கையில் எடுத்துக் கூறுவாள்.

'அண்ணை இது நீயாம் இது நானாம்' அவளது சிறுவிரல் கங்குமட்டையின் இரு கிளைகளையும் ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டும். அப்போது அது அவருக்கு இன்று புரிந்தது போல விளங்கவில்லை. இப்போது நன்கு புரிகிறது. ஒரே அடியில் பிறந்த இரு கிளைகள்.

ஆனால் பாக்கியம் அவரது குடும்பத்திற்கு மாறாத வசையை ஏற்படுத்திவிட்டாள். ஆச்சி அப்புவின் மரணத்திற்கு அவளே காரணமாக அமைந்தாள். ஆச்சி, அப்புவின் மரணத்திற்கு மட்டுமா? அவருடைய இரண்டாவது மகன் சின்னத்துரையின்....

அச்சம்பவத்தை அவர் நினைத்துப் பார்க்கவே விரும்பவில்லை. ஆனால், நினைவுகள் அழியக் கூடியனவா? அதை எப்படி அவரால் மறக்கமுடியும்? பாக்கியத்தோடு அவர் பேசிய இரண்டாவது சந்தர்ப்பமும் அதுதானே?

பாக்கியம் வீட்டை விட்டு கனகசபையோடு ஓடி இருப்பத் திநான்கு ஆண்டுகள் கழிந்து போயின. அதற்குள் எத்தனையோ நிகழ்ந்துவிட்டன. அவரின் மனைவி இறந்து போனது அவரின் பிள்ளைகளுக்குத் திருமணங்கள் நடந்தது... எல்லாம் அக்காலத்துள்தான்.

பாக்கியம் கணவனோடு துணுக்காயில் இருப்பதாக எப்போதோ அவர் அறிந்திருந்தார். இரண்டு பிள்ளைகளும் இருப்பதாக எவரோ கூறியிருந்தார்கள்.

இருந்தாற் போல ஒருநாள் கனகசபை அவர் வீட்டிற்குள் வந்தான். வாசலில் பாக்கியமும் பிள்ளைகளும் நின்றிருந்தார்கள். அவர்கள் வந்தது ஒரு மாலை வேளையில் தான். நல்ல நினைவு இருக்கிறது.

கனகசபையை முதலில் அவரால் அடையாளம் காண முடியவில்லை.

'நான்தான் கனகசபை' என்றான் அவன்

'பாக்கியத்தின்'

ஓம்

'ஏன் வந்தாய்? உனக்கு இங்கு என்ன அலுவல்..?' என்று அவர் கேட்டார்.

கனகசபை மௌனமாக நின்றான் பின் கூறினான். பாக்கியத்தின் பங்கைப் பிரித்துக் கொடு இவ்வளவு காலமும் நீங்கள் அனுபவிச்சது போதும்..

அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்

எந்தப் பங்கு..?

காணி.. தோட்டம்

அப்போதுதான் சின்னத்துரை வெளியே வந்தான். அவரது பிள்ளைகளில் அவன் சற்று முன் கோபமும் படபடப்பும் மிகுந்தவன்.

என்த்தைப் பிரிக்க வேணுமாம். அப்பு? உவர் ஆர்? என்று அவன் கேட்டான்.

அதன்பின் நடந்தவற்றை நினைக்க அவரது இதயம் கலங்கியது. வார்த்தைகள் படிப்படியாகத் தடித்தன. கனகசபையும் சினத்துரையும் வாக்குவாதப் பட்டுக் கொண்டார்கள்.

இது எங்கடை சொத்த உனக்கு என்னடா பங்கு? எளிய நாய்ப்பிறவிகள்" என்று ஏசினான் சின்னத்துரை. "கனக்கக் கதைத்தாய் என்றால் உன்னை கழுத்திலை பிடித்து வெளியே தள்ளுவன்?

செய்யடா பார்ப்பம்.. என்றான் கனகசபை

'சின்னத்துரை சின்னத்துரை' என்று அவர் எவ்வளவு தடுத்தும் அவன் கேட்கவில்லை.

அவர் பயந்துபோய் நின்றார்.

கனகசபையைப் பிடித்து இழுத்துத் தள்ளி விட்டான் சின்னத்துரை தள்ளின வேகத்தில் கனகசபை பனையோடு மோதி விழுந்தான். விழுந்தவன் கண்ணிமைக்கும் நேரத்துள் எழுந்து திண்ணையில் சாத்தியிருந்த கோடரியை எடுத்து...

சின்னாச்சிக்கிழவர் கண்களைத் துடைத்துக் கொண்டார். அதோ அந்த இடத்தில்தான் சின்னத்துரை தறித்துப் புரட்டி பனைமரமாக விழுந்து கிடந்தான்.

பாக்கியமும் பிள்ளைகளும் ஓடி வந்து கனகசபையை பிடித்துக் கொண்டார்கள்.

'பாக்கியம் இது உனக்கே நல்லாயிருக்கா...? இவை தாம் அவர் பாக்கியத்துதோடு பேசிய வார்த்தைகள்.

'கொலைக்காரி கொலைகாரி' என்று இதயம் ஓலமிட்டது. பாவி

வழக்கு நடந்தது கனகசபை சிறை சென்றான் பாக்கி யமும் வழக்காடித் தன் பங்கைப் பெற்றுக் கொண்டாள்.

கார் ஒன்று வாசலில் வந்து நின்ற சத்தம் கேட்டது. சின்னாசிக்கிழவர் வாசலைப் பார்த்தார்.

இந்தக் காத்துக்கையும் மழையுக்கையும் யார் தான் வருவினம்?

அப்பு ...! என்று அழைத்த படி சிவசுப்பிரமணியம் வந்தான். அவ னைத் தொடர்ந்து அவனது மனைவி யும் பிள்ளைகளும் வந்தனர். அவருடைய மகள் பூரணியும் கூடவே வந்தாள்.

'பத்து நாட்களாகச் சுகமில்லாமல் கிடந்தாயாம், அப்பு! எங்களுக்கு அறிவிக்கப்படாதே? இங்கை தனியக் கிடந்து கஷ்டப்படவேணுமே? என்றாள் பூரணி

உனக்குச் சுகமில்லை என்று சோமப்பாவின் மகன் கொழும்பிலை சொன்னான். உடனே வர வசதிப் படவில்லை நேற்றுத்தான் சிலாபத்துக்போய் அப்படியே பூரணியையும் கூட்டிக்கொண்டு வந்தன் கடுமையான காய்ச்சலே, அப்பு! எங்கை மருந்து வாங்கினனீ...? என்று பொரிந்து தள்ளினான் மகன்.

சின்னாச்சிக்கிழவர் எல்லாரையும் பார்த்துச் சிரித்தார்.

வேலிக்கு அப்பால் பாக்கியம் கங்குமட்டை பொறுக்கிக் கொண்டிருந்தாள். அவள் மீது பூரணியின் பார்வைபட்டது.

'உவள் இன்னும் திரியாளே? பற நாய்கள் தாங் களும் ஒரு மனிசரெண்டு சீலை உடுத்துக் கொண் டு திரியினம்.. உதிலை தானே சின்னண்ணையைச் சரித் தவள்..." என்றாள் பூரணி. அவள் பேசியவை பாக்கியத்தின் காதுகளில் விழுந் திருக் காது. விழுந் திருந் தாலும் அவள் எதுவும் பேசாள்.

பாக்கியத் தின் வீட்டுப் பனைகள் அம்மன் கோவிலின் பூசாரியின் உடுக்குக்கு இணங்கத் தலை விரித்தாடும் கலை வந்த பெண் போல சிலிர்த்து ஆடின.

உள்ளே சமை யல் நடந்து கொ ண்டிருந்தது. இன்று சமைக்கின்ற வேலை அவருக்கு இல்லை. அவர் திண் ணையி லேயே அமர்ந் திருந் தார்.

பாக்கியம் வேலி யோரம் நின்று அவ ரைப் பார்ப்பது போல அவருக்குப்பட்டது.

அவள் மட்டும் இல்லாமலிருந்தால்..?

நாற்பது ஆண்டுகளில் பாக்கியத்தோடு மூன்றாவது தடவையாகப் பேசிய சந்தர்ப்பம் மனதில் கனத்தது. அவர் புகையிலையை எடுத்துச் சுருட்டத் தொடங்கினார்.

பதினைந்து நாட்களுக்கு முன் நடந்தது. அவருடைய தோட்டங்கள் இன்று குத்தகைக்கே செய்கை பண்ணப்படுகின்றன. இடையிடையே சென்று தோட்டங்களைப் பார்பதில் அவருக்குத்தனி ஆவல். பதினைந்து நாட்களுக்கு முன் தோட்டங்களுக்குப் போய்விட்டு வரும் வழியில் மழை பிடித்துக் கொண்டது.

எல்லாம் வருவதற்குக் காலவேளை இருக்கிறது. போலும்

வீட்டிற்கு வந்து தலையைத் துடைத்தபோது, மெதுவாகத் தும்மல் கிளம்பியது. இரவு பத்துமணி அளவில் உடம்பெல்லாம் பற்றி எரிவது போல உணர்வு. உடலும் மெதுவாக நடுங்கத் தொடங்கியது. நாக்கு வேறு வறண்டு தாகத்தால் துடித்தது. சின்னாச்சிக்கிழவர் எழுந திருக்க முயன்றார். முடியவில்லை.

நேரம் செல்லச்செல்ல நோயும் கடுமையாகியது. அவரை அறியாமலேயே அவருள் பயம் தலை தூக்கியது.

ஒருவரும் பக்கத்தில் இல்லாமல் அனாதையாகச் சாகப்போகிறேன்.

உடம்பிற்குள் ஏதோதோவெல்லாம் நடந்தன

ஐயோ என்று கூச்சலிட முயன்றார். வார்த்தைகள் வெளிவர முடியவில்லை. அதற்குப் பிறகு நடந்தது அவருக்குத் தெரியாது.

அவருக்கு அறிவு வந்தபோது அவருக்குப் பக்கத்தில் பாக்கியம் அமர்நதிருந்தாள். அவரால் அதை நம்பவே முடியவில்லை. பாக்கியம் எப்படி இங்கே வந்தாள்? நான் வருத்தமாகக கிடப்பது அவளுக:கு எப்படித் தெரிந்தது?

நீயா? என்றார். 'ஏன் வந்தாய்'

'பத்து நாளாகிறது' அண்ணை

அவர் திடுக்கிட்டுப் போனார். பத்து நாட்களாக அவர் வருத்தத்தில் ஒன்றும் தெரியாமல் கிடந்திருக்கிறார். பாக்கியத்தை நன்றியோடு பார்ததார். அவர், அவள் அவரைப் பாசத்தோடு பார்த்துவிட்டு வெளியேறினாள்.

அவள் போனதன் பின் வைத்தியர் சோமப்பா வந்தார்.

'நீர் பிழைச்சது பெரிய விஷயம் காணும். ஒரு வரும் இல்லாமல் சாகக்கிடந்தீர் பாக்கியம் எல்லோ உம் மைக் காப்பாற்றியது.'

அவர் சுகமாகி எழுந்ததன் பின் அவரைக் கண்டுபோக அவரது பிள்ளைகள் வந்திருக்கின்றார்கள். அவர் செத்துக்கிடந்தால் இன்று வந்து அடக்கம் செய்து விட்டுப் போவார்கள்.

அவர்களிலும் தவறில்லை

கம்பளியால் இறுக்கிப் போர்ததுக் கொண்டு அத் திண்ணையில் அவர் உட்காந் திருந்தார். மாலை தேய்ந்து இரவு படர்ந்து கொண்டிருந்தது. முன்னால் வெகு தூரத்தில் இருந்து வேலிக்கு அப்பால் பாக்கியத்தின் வீட்டினுள் எரியும் விளக்கின் ஒளி செத்தைக்கு ஊடாக "மினுக் மினுக்" கென்று தெரிந்தது.

பாக்கியம் இப்போது படுத்திருப்பாள். மழைக்குள் நனைந்தாளோ? வருத்தம் ஏதாவது வந்தி ருக்குமோ? போய் பார்த்தால் என்ன?

அப்புவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. சின்னத்துரை இரத்தவெள்ளத்தில் கிடந்த காட்சி கண் முன் தெரிகிறது.

"கொலைகாரி" என்று உள் மனம் ஓலமிட்டது. ஒரு பெண் சரிவர நடக்காது போனால் அதனால் எத் தனை அனர்த்தங்கள் விளைந்து போகின்றன? பாக்கியம் எதுக்கும் பிடிக்காத ஆனால் தனக்குப் பிடித்தமான ஒரு காரியத்தைத்தான் செய்தாள். ஆனால் நிகழ்ந்தவை....?

"அப்பு உள்ளுக்குள் வாணை ....... காற்று நல்லா வீசுது ...." என்று பூரணி கூப்பிட்டாள். அவர் நினைவு எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றது.

"அவருக்கு ஒருகோதாரியும் விளங்காது .... எழும்பி வானை அப்பு!" என்று சிவசுப்பிரமணியம் உரக்க கத்தியது காதில் விழுந்தது. உள்ளே போக எழுந்தவரின் கண்கள் எங்கோ நிலை குத்தி நின்றன.

இதென்ன, பாக்கியத்தின் வீட்டிற்கு அருகில் நின் றிருந் தவனை பேயாட்டம் ஆடுகிறதே? மற்றப் பனை களிலும் இதன் ஆட்டம் சற்றுக்கூடுதலாக ...... இதென்ன அது சரிவது போல ..... சரிகிறது ..... ஐயோ பாக்கியம் ......

"ஐயோ ......!" என்று சின்னச்சிக்கிழவர் கத்தி னார். அவரது கூச்சலைத் தொடர்ந்து "படீர்" என்ற பெருஞ் சத்தத்துடன் பாக்கியத்தின் வீட்டின் மீது பனை மரம் சாய்ந்தது.

"ஐயோ .... அம்மா ...." என்ற ஓலம் எழுந்து தேய்ந்தது.

பூரணியும் சிவசுப்பியமணியமும் வெளியே ஓடி வந்தார்கள் சின்னக்கிழவர் பாக்கியத்தின் வீட்டைப் பார்த்தபடி திக்பிரமை பிடித்து நின்றார்.

பூரணி நிலைமையை புரிந்து கொண டாள்.

"உவளுக்கு இது நல்லா வேணும் .... பனை மட்டுமே இடியே விழும் ...."

சின்னச்சிக்கிழவர் மகளை வெறியோடு பார்த் தார். மறுகணம் பாக்கியத்தின் வீட்டை நோக்கி ஓடத் தொடங்கினார்.

"அப்பு நில்!..." என்று உறுமினான் சிவசுப்பிரமணியம் ..." எங்கே போறாய் ...." என்று ஓடிப் போய் அவர் கையைப்பற்றினான்" "தம்பியை வெட்டிச் சரி ந்ததை மறந்து போனாயோ உனக்கு ஒன்றும் தெரியாது நீ போகக்கூடாது ...."

"இவன் சொல்வதும் சரியோ ....?

அவர் ஒருகணம் தயங்கி நின்றார்?

அவர் ஒருகணமட பேசாது நின்றார். பாக்கியம் வீட்டில ஓலம் எழுந்தது. மறுகணம் எதேஓர் உணர்வு கைகளை உதறிவிட்டு பாக்கியத்தின் வீடுநோக்கி ஓடத் தொடங்கினார்.

"நில்லனை, அப்பு .....நீ அங்கே போனால் நான் பெலிடோல் குடிச்சுச் சாவன்..." கொள்ளியும் வைக் கமாட்டான் .... என்றான் மகன்.

சின்னச்சிக்கிழவருக்கு அவை கேட்டன.

அவர் அவற்றை எல்லாம் உதறினார்.

தாய் தகப்பனுக்கு அடங்கிய பிள்ளை. மனைவிக்கு அடங்கிய கணவன் பிள்ளைகளுக்கு அடங் கிய தந்தை பொன்னம்பம்பலபிள்ளை என்ற சின்னச் சிக்கிழவர் தன்னுணர்வோடு தங்கை வீட்டை நோக்கி ஓட்டமாய் ஓடிக்கொண்டிருந்தார்.

கங்குமட்டைகள் விழுந்து கொண்டிருந்தன. ●

முற்றும்.

# கூட்டமைப்புப் பெற்ற ஆசனங்கள் 32 நிராகரிக்கப்பட்டவையும் சேர்த்து

எல்லோராலும் வெகுவாக எதிர்பார்க்கப்பட்ட வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரலாற்று வெற்றியொன்றை பதிவுசெய்துள்ளது. கருத்துக் கணிப்புக்களை பொய்யாக்கி, அரச தரப்பின் வலுவான எதிர்ப்பிரச்சார நடவடிக்கையை முறியடித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமாக ஆசனங்களைக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் பிரச்சார மேடைகள் தோறும் மக்களைக் கேட்டு வந்த முப்பது ஆசனங்களை மக்கள் அவரது சொல்லுக்கு செலுத்தும் மரியாதையாக வழங்கி தமிழர் உணர்வுகளைச் சர்வதேசத்துக்கும் குறிப்பாக, தென்னிலங்கை அரசுக்கும் மிகத் தெளிவாக பதிந்திருக்கின்றார்கள். இருந்தும் இந்த தேர்தலில் கூட்டமைப்பு பெற்றிருக்கவேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கை இன்னும் ஓரிரண்டால் அதிகரித்து இருக்க வேண்டும் என்பது வாக்கு எண்ணப்போன அரச உத்தியோகத்தர்களின் கவலையாகவுள்ளது. காரணம் கூட்டமைப்புக்கு என அளிக்கப்பட்ட வாக்குகள் பல வாக்காளர்களின் வாக்களிக்கும் திறனின்மை காரணமாக நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக மாறியிருக்கின்றன. இவற்றின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கானவை எனில் போயின என்று விட்டுவிடலாம். ஆனால் அவை ஆயிரக்கணக்கானவை என்பது தான் வாக்கு எண்ணச் சென்றவர்களினது அவதானிப்பும்; தேர்தல் திணைக்களத்தின் புள்ளி விபரமும் கூட.

குறிப்பாக, கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி வேட்பாளரகளாக அரியரட்ணம், குருகுலராஜா, பசுபதிப் பிள்ளை ஆகியோரின் இலக்கங்களுக்கு விருப்பு வாக்களிக்கப்பட்ட மூவாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வீட்டுச் சின்னத்துக்கு எதிரே புள்ளடியிடப்படாமையால் நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக ஒதுக்கப்பட்டுள்ளன. உண்மையில் இவ் வாக்குகளில் ஆயிரம் வாக்குகள் தானும் வலுவானதாக இருந்திருப்பின் கிளநொச்சிக்கான நான்கு ஆசனங்களும் கூட்டமைப்பு வசமாகி நான்காவது விருப்புத்தெரிவான திருலோக மூர்த்திக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும். கூட்டமைப்பின் ஆசனங்களின் எண்ணிக்கையும் 31 ஆக உயர்ந்திருக்கும்.

வாக்காளர்களுக்கு வாக்களிப்பது தொடர்பான பூரண அறிவின்மை காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்னடைவுகளைச் சந்தித்திருக்கின்றது. வெற்றியைக் கொண்டாடும் கூட்மைப்பு பிரமுகர்கள் வெற்றியை இன்னும் அதிகரிப்பதில் தடையாக இருந்த காரணிகளையும் இனங்கண்டு, எதிர்காலத்தில் அவ் தடைகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளுவது அடுத்து வரும் தேர்தல்களுக்கு பிரயோசனமான தாகவிருக்கும்.

எனது மனைவி அரச உத்தியோகத்தர். இம்முறை வாக்குகளை எண்ணும் பணிகளுக்குச் சென்றிருந்தார். அவர் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் தன்மை குறித்துச் சொன்னபோது எமது வாக்காளர்களுக்கான விழிப்பூட்டல் போதாமையை உணர்ந்து கொள்ளக்கூடியதாகவிருந்ததுடன் எப்படியெல்லாம் நம் வாக்காளர்கள் யோசிக்கின்றார்கள், தவறு விடுகின்றார்கள் என்பதையும் அறிந்து கொள்ளக்கூடியதாகவிருந்தது.

சாதாரணமாக சின்னத்துக்கு எதிரே உள்ள கூட்டில் புள்ளடியிட்டு விருப்பு இலக்கங்களுக்கு மேலே புள்ளடியிடுதல் வேண்டும். இதனைப் புரிந்து கொள்ளாத வாக்காளர்கள் பின்வரும் வழிகளில் தங்கள் வாக்குகளை அளித்திருக்கின்றார்கள்.

1. சின்னத்துக்கு எதிரே புள்ளடியிடாமல் சின்னத்துக்கு மேலே புள்ளடியிட்டுள்ளார்கள். ஆனால் இவ்வாறான வாக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.
2. கையெழுத்து வைக்கத் தெரியாது பெருவிரல் அடையாளம் பாவிக்கும் வாக்காளர்கள் வாக்களிக்கவும் பேனையை தூக்கத் தயக்கத்துடன் பேனை மையை கைகளில் பூசி சின்னத்தின் மேல் அல்லது பக்கத்து கூட்டின்மேல் பதிந்திருக்கின்றார்கள். விருப்பு வாக்குகளையும் இவர்கள் இவ்வாறே அளித்திருக்கின்றார்கள். இவ்வாறான வாக்குகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.
3. சிலர் வீட்டுச்சின்னத்துக்கு எதிரே புள்ளடியிட்டு தங்கள் விருப்பு வேட்பாளர்களின் இலக்கங்களைத் தேடியபோது அவர்கள் கண்களுக்கு தெரிந்த இலக்கங்கள் சுயேட்சைக்குழுக்களின் இலக்கங்களே. அவற்றுக்கு புள்ளடியிட்டு தங்கள் வாக்கை தெரியாமலேயே செல்லுபடியற்றதாக்கியிருக்கின்றார்கள். இவ்வாறான வாக்குகளும் வீட்டுச் சின்னத்துக்கு அளிக்கப்பட்டவையே என்பதையும் உறுதி செய்ய முடிகின்றது. அரசு சுயேட்சைக் குழுக்களைத் திட்டமிட்டு களமிறக்குவது இவ்வாறு வாக்குகளை செல்லுபடியற்றதாக்கவும் இருக்கலாமோ எனவும் சந்தேகம் உண்டு. சுயேட்சைக் குழுக்களாகப் போட்டியிடும் தமிழர்கள் எதிர்காலத்தில் கொஞ்சம் தன்னும் இனமானத்தை யோசிக்க வேண்டும். அல்லது தேர்தல்கள் திணைக்களம் பொது மக்களுக்கு உள்ள ஒரேயொரு ஜனநாய வழியிலான வலுவான உரிமையான வாக்களிக்கும் உரிமையைக் காக்கும் பொருட்டு இனிவரும் தேர்தல்களில் சுயேட்சைக் குழுக்களுக்கு இலக்கங்களை வழங்குவதைத் தவிர்த்து ஆங்கில அல்லது தமிழ் வரிசை எழுத்துக்களை அல்லது முதன்மை வேட்பாளரின் பெயரை வழங்குவது குறித்துச் சிந்திக்க வேண்டும். அல்லது போனால் அறியாமைத்தனமான அப்பாவி வாக்காளர்களின் வாக்குரிமையைக் காப்பாற்றிக் கொடுக்க முடியாது போய்விடும்.

**ஒரு தொகுதி இளைஞர்கள் பிரச்சார நடவடிக்கைகள், பதாகைகள் ஒட்டுதல், கூட்டங்களை ஒழுங்கமைத்தல், மக்களைச் சந்தித்தல் என தேர்தல் முடியும் வரை தூக்கமின்றி உழைக்க இன்னொரு பகுதி இளைஞர்கள் வீடுகளில் இருந்து இணையத் தளங்களையும் முகநூலையும் பார்த்த வண்ணம் வாக்களிக்க மறந்திருக்கின்றார்கள். மாவை சேனாதிராஜா தனது தொகுதி என மார்தட்டும் வலி-வடக்கு காங்கேசன்துறைத் தொகுதியில் வாக்களித்த இளைய சமூகத்தின் எண்ணிக்கை கருத்தக்களவில் இல்லை**

4. கட்சியின் சின்னத்துக்கு புள்ளடியிடாது விருப்பு வாக்குகளை மட்டும் வழங்கியுள்ள வாக்களார்களின் நிலை குறித்து ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.
5. தெரியாத்தனமாக ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளுக்கு வாக்களித்து தங்கள் வாக்குகளை செல்லுபடியற்ற தாக்கியவர்களும் உண்டு.

தபால் மூல வாக்களிப்பில் அதிகாரி தரத்திலானவர்கள் பலர் விண்ணப்பங்களை கையெழுத்திடாமல் அனுப்பியதன் ஊடாக வாக்களிக்கும் உரிமையைப் பெற முடியாது போயுள்ளனர். இவ்வாறு இலங்கை முழுமைக்கும் 29000 வாக்குகள் வரை வாக்களிக்காமலேயே இழக்கப்பட்டதாகத் தேர்தல்கள் திணைக்களப் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. அரச உத்தியோகத்தர்களே இப்படி நடந்தால் சாதாரண மக்கள் தவறு விடுவதில் என்ன குறை சொல்ல முடியும் என்றும் பலர் சொல்கின்றார்கள். இது தொடர்பில் இவ்வாறு விண்ணப்ப நிராகரிப்பின் காரணமாக வாக்களிக்கும் உரிமையை இழந்த ஒரு உயர்மட்ட அதிகாரியைக் கேட்டபோது அவர் சொன்ன விளக்கம் ஆச்சரியமாகவிருந்தது. தங்களுள் பலர் வேண்டுமென்றே அப்படி கையெழுத்திடாமல் அனுப்பியதாகச் சொன்னார். காரணம் கேட்டபோது தங்கள் பதிவு உயர்வுகள், நியமனங்கள், இடமாற்றங்களின் போது தபால்மூல வாக்களிப்பில் தாங்கள் யாருக்கு வாக்களிக்கின்றோம் என்பதை மிகவும் மலினத்தனமாக, ஜனநாயக விரோதத் தன்மையாக அளும் தரப்பினர் எடுத்துப் பார்ப்பதாகவும் அதனால் ஆளும் தரப்புக்கெதிராக வாக்களிக்கும் அதிகாரிகள் பழிவாங்கப்படும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும், கடந்த காலங்களில் இவ்வாறு நடைபெறறுள்ளதாகவும் எனவே எதற்கு வீண் வம்பு என தாங்கள் வாக்களிப்பிலிருந்து ஒதுங்கிக்கொள்ள இவ் உத்தியைக் கையாண்டதாகவும் கூறினார். வடக்கில் இவ்வாறு நிராகரிக்கப்பட்ட வாக்குகள் யாவும் கூட்டமைப்புக்குச் சொந்தமானவை. அத்தனையும் அளிக்கப்பட்டிருந்தால் அரச தரப்பின் நிலமை இன்னும் விபரீதமாகவிருந்திருக்கும். இவ்வாறு அளிக்காமல் அழிக்கப்பட்ட வாக்குகளுக்குச் சொந்தமான அதிகாரிகள் சற்றுப் பொது நன்மை கருதிச் சிந்திக்க வேண்டும்.

முல்லைத்தீவிலும் சொற்ப வாக்குகளினால் கூட்டமைப்பு தனது ஒரு ஆசனத்தை இழந்ததாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. அங்கு நிராகரிக்கப்பட்ட வாக்குகளில் சில நூற்றுக் கணக்கான வாக்குகள் செல்லுபடியானவையாக இருந்திருந்தால் முல்லைத் தீவின் மொத்த ஆசனங்களும் கூட்டமைப்பு வசமாகியிருக்கும். கிளி நொச்சியிலும், முல்லைத் தீவிலும் நிராகரிக்கப்பட்ட கூட்டமைப்பின் வாக்குகளில் சில நூற்றுக் கணக்கானவை செல்லு படியாகியிருப்பின் கூட்டமைப்பு மொத்தம் 32 ஆசனங்களைப் பெற்று இமாலயச் சாதனையைப் படைத்திருக்க முடியும்.

அதுமட்டுமன்றி தமிழ்த் தேசம் முழுவதும் விழிப் போடிருந்து வாக்களித்த வேளையிலும், கணிசமானோர் தூங்கிக் கிடந்துள்ளனர். புரட்டாதிச் சனி விரதத்தைக் கொண்டாடி வாக்களிப்பைத் தவிர்த் தோரும் அசட்டையீனமாக விருந்தோரும், எமக்கேன் வில்லங்கம் என விலகி நின்றோரும் என ஒருஅணி வாக்காளர்களும் இருந்துள்ளனர். இவர்களும் வீட்டுக்குச் சொந்தக்காரரே.

அது போன்று ஒரு தொகுதி இளைஞர்கள் பிரச்சார நடவடிக்கைகள், பதாகைகள் ஒட்டுதல், கூட்டங்களை ஒழுங்கமைத்தல், மக்களைச் சந்தித்தல் என தேர்தல் முடியும் வரை தூக்கமின்றி உழைக்க இன்னொரு பகுதி இளைஞர்கள் வீடுகளில் இருந்து இணையத் தளங்களையும் முகநூலையும் பார்த்த வண்ணம் வாக்களிக்க மறந்திருக்கின்றார்கள். மாவை சேனாதிராஜா (எம்.பி) தனது தொகுதி என மார்தட்டும் வலி - வடக்கு காங்கேசன்துறைத் தொகுதியில் வாக்களித்த இளைய சமூகத்தின் எண்ணிக்கை கருத்தக்களவில் இல்லை என்பது களத்தில் பெறப்பட்ட அவதானிப்பாகும். இதற்கு வலி-வடக்கைச் சேர்ந்த ஒருவர்தானும் இத்தேர்தலில் போட்டியிடாமையும் காரணமாக இருந்திருக்கலாம்.

அதுமட்டுமன்றி பல்கலைக்கழகக் கல்விக்காகவும், வேலைகள் நிமித்தவும் குடாநாட்டுக்கு வெளியே வசிக்கும் வாக்காளர்கள் பலர் தேர்தலை அவ்வளவு பெரிதாக எடுத்து வாக்களிக்க வருகை தரவில்லை. இதுவும் சற்று வீழ்ச்சியான போக்கே. சாதனை வெற்றி என்ற நிறைவை விடுத்து இன்னும் வெற்றியை அதிகரித்திருக்க வாய்ப்பிருந்தும் அதனை இழந்தமை வேதனையாகவே பார்க்கப்படவேண்டும். அதுவே இனி வரும் தேர்தல்களிலும் வெற்றிகளை உறுதிசெய்ய உதவியாகவிருக்கும்.

● பல்லவன்

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்

உலக முதியோர் சனத்தொகை அதிகரிப்புடன் இலங்கையில் முதியோர் சனத்தொகை துரிதகதியில் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. 2050 ஆம் ஆண்டளவில் முதியோர் சனத்தொகை 27.6% ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றது. முதியோர்கள் மிகுந்த அறிவு மற்றும் அனுபவம் நிறைந்தவர்கள். அபிவிருத்தி முன்னெடுப்பிற்கு அவர்களின் அறிவு மற்றும் திறமைகளை பரிமாறுவதனூடாக நாட்டின் அபிவிருத்திக்கு முதியோர்களின் பங்களிப்பினையும் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டு முதியோர்களுக்கான தேசிய சபையும் மற்றும் செயலகமும் 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டமூலத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. தெற்காசியப் பிராந்தியத்தில் முதியோர் சனத்தொகை துரிதகதியில் அதிகரிக்கும் நாடுகளில் ஒன்றாக் இலங்கையும் விளங்குகின்றது. இச் செயலகமானது எதிர்காலத்தில் அதிகரிக்கவுள்ள முதியோர் சனத்தொகையினைக் கருத்திற்கொண்டும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்டும் நிறுவப்பட்டுள்ளது.

"முதியோர்களின் நலன்களை மேம்படுத்துதல், உரிமைகளைப் பாதுகாத்தல் என்பனவற்றினூடாக அவர்கள் கௌரவமாகவும், கண்ணியமாகவும், சுதந்திரமாகவும் வாழ வழி அமைத்தல், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் முதியோர்களுக்கான பங்களிப்பின் தேவையினை உணர்த்துதல் மற்றும் தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்' தேசிய செயலகத்தின் பணிக்கூற்றாகும்"

**மேற்கொள்ளும் பணிகளும் சேவைகளும்**

**முதியோர்களுக்கான பகல் நேர நிலையங்கள்**

முதியோர்களுக்கான பகல் நேர நிலையங்கள், 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களினை வினைத்திறன் செயற்பாடுகளில் ஈடுபடுத்துகின்றது.இந்நிலையங்களினூடாக முதியோர்கள், கருத்துக்களினைப் பரிமாறுதல், சுய தொழில்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல், ஆன்மீகச் செயற்பாடுகள், பயிற்சி மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவதற்கு வாய்ப்புக்களினைப் பெற்றுக்கொள்வார்கள்.ஒவ்வொரு பகல் நேர நிலையத்திற்கும் ரூபா. 25,000 நிதியுதவி வழங்கப்படுகின்றது. (அலுமாரிகள், தேநீர் கோப்பைகள் மற்றும் சமையல் உபகரணத்தினைக் கொள்வனவு செய்வதற்காக)

முதி யோர்கள், நிதியுதவியினைப் பெற்றுக்கொள்வதற்காக பகல் நேர நிலையத்திற்கு வருகை தருகின்றனர். (வருமானத்தினைப் பெருக்கும் செயற்பாடுகளுக்கான தேவையான மூலப்பொருட்களினைக்

தொடர்ச்சி 10ம் பக்கம்...

# தெளிவாகப் பேசுங்கள்

உலகமே இன்று பேசிக்கொண்டுதான் இருக்கின்றது. இந்தக் கைபேசி வந்ததிலிருந்து மூடியிருக்கும் வாய்களைப் பார்ப்பதே அரிதாகி விட்டது. ஆனால் நம்முடைய உரையாடல்களைச் சற்று அவதானித்துப் பார்த்தால் பயனள்ள பேச்சுக்களைவிட பயனற்ற வீண் பேச்சுக்கள் தான் அதிகம். நம்மில் எத்தனைபேர் உரையாடற் கலையை உருப்படியாகப் பயன்படுத்துகின்றோம். வாருங்கள் அது பற்றிக் கொஞ்சம் பேசலாம். நல்ல பேச்சாளராக வருவதற்கு நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில வற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றோன். பேசும்போது இவை களை நீங்கள் மனதிற்கொள்ளுங்கள். நீங்களும் மற்றவர் விரும்பும் ஒருவராக மாறிப்போவீர்கள்.

பேசுவதற்கு முன்னர், 'இப்பொழுது பேச வேண்டிய தேவை இருக்கின்றதா? என்று ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். தேவை யின்றிப் பேசாதீர்கள். தேவைப்பட்டால் மட்டும் பேசுங்கள். வளவளத்துப் பேசாதீர்கள். அப்படிப் பேசினால் எமது கண்ணியம் குறைவதுடன் பொறு ப்பில்லாதவன் என்ற முத்திரையும் விழுந்துவிடும். யாரிடம் பேசுகின் றோம் என்பதை அறிந்து பேசுங்கள். மலர்ந்த முகத்துடன் மென்மை யாகவும் இனிமையாகவும் உரையாடுங்கள். தொடர்ந்து உரத்துப் பேசவும் வேண்டாம். குரலைத் தாழ்த்தியும் பேசவும் வேண்டாம். நடு நிலைத் தொணியைக் கடைப்பிடியுங்கள்.

பிறரைப்புண்படுத்தும் வகையிலோ கிண்டலடித்தோ பேசாதீர்கள். கண்ணியமான நகைச்சுவை என்பது வேறு. பிறரை நக்க லடித்துக் கிண்டலடிப்பதென்பது வேறு. நகைச்சுவை எனும் பெயரில் ஒரு போதும் ஆபாசமான, அபத்தமான நகைச்சுவைகளைப் பேசாதீர்கள். அதனால் மற்றவர்கள் உங்களைத் தவறாக நினைத்து விடமுடியும். முரட்டுத்தனமாகப் பேசாதீர்கள். அறிவார்ந்த முறையில் உள்ளங்களை ஈர்க்கும் வகையில் பேசுங்கள்.

உரையாடல் ஓர் உன்னதக் கலையாகும். வாழ்க்கையில் உருப்பட வேண்மாயினும் சரி, உயர்வடைய வேண்டுமாயினும் சரி, உம்மென்று இருக்காமல் வாய்திறந்து பேசுங்கள். அகத்தின் அழகு முக த்தில் தெரியும் என்பார்கள். காரணம் யாதெனில் கண், காது, மூக்கு, வாய், மெய் என்பனவெல்லாம் ஒரே இடத்தில் இருப்பதாற்தான். உங்கள் உணர்வுகளை வெளியிடவும், தேவைகளைக் கேட்கவும், எண்ண ங்களைப் பூர்த்தி செய்யவும் நியாயங்களை எடுத்துச் சொல்லவும் நீங்கள் பேச வேண்டும். மௌனமாக இருப்பதும், சைகை செய்வதும் ஒருவகை பேச்சுக் கலைதான். பேச்சுக்கேற்ற வகையில் உடலை வளைத்தும், நெளித்தும் பேச முடியும். வாய் பேசுவதை விட கண் களால் தெளிவா கவும், உணர்வுபூர்வமாகவும் பேச முடியும். தெளிவாக ஒருவன் பேசக் கற்றுக் கொண்டால் அவனே வாழ்க்கையில் உயர்ந்து செல்கின்றான்.

பேசும்பொழுது கேட்பவரின் கவனத்தை முழுமையாக ஈர்த்து வைத்திருக்கும் வகையில் ஒருவரது பேச்சு அமைந்திருக்க வேண்டும். அடுத்தவரைப் பாராட்டிப் பேசும்போது பலர் முன்னிலையில் பாராட் டுங்கள். குறைகளை எடுத்துக் கூறுவதாயின் தனிமையிற் கூறுங்கள். இதுவே நல்ல பண்பாகும்.நம்பிக்கையான பேச்சு மற்றவர்களின் மனதில் ஆழப்பதிந்து கொள்கின்றது. நம்பிக்கையற்ற வார்த்தைகளோ காற்றோடு கலந்து விடுகின்றது. பிறருடன் பேசுகின்ற போது அவர் களுக்குத் தெம்பூட்டும் வகையில் பேச வேண்டும். உற்சாகமூட்டும் உப சார வார்த்தைகள், அவரைப் பற்றி மற்றவர்கள் வெளியிட்ட நல்ல அபிப் பிராயங்கள், நன்றிகள், நல்லெண்ணத்துடன் கூடிய வாழ்த்துக்கள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளுங்கள். தகுதியற்ற புகழுரைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அவைகளை ஆன்றோர்கள் ஏற்பதில்லை. பேசியதில் தவறு இருந்தால் மனந்திறந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்பணப்பு பேசியவரை என்றும் பாதுகாக்கும், மதிப்பையும் அதி கரிக்கும்.

மற்றவர்களிடம் பிறரைப் பற்றிப் புறங்கூறுதல் குறை சொல்லுதல், கோள் சொல்லுதல் போன்றனவ்றறைத் தவிர்க்க வேண் டும். எவரும் இதை விரும்புவதில்லை. யாரிடம்பேசுகின்றோம். எப்படிப் பேசுகின்றோம். எதற்காகப் பேசுகின்றோம். எவ்வளவு நேரம் பேசு கின்றோம் என்பதை மனதளவில் தெளிவாக்கிக் கொண்டு பேச வேண்டும். அடுத்தவரிடம் பேசும்போது வாய்ப்புக் கிடைக்கும் போதும் அவர்களின் பெயரை உச்சரித்துப் பேசலாம். முதியவர்களையும், உயர் ந்த அந்தஸ்தில் உள்ளவர்களையும் மரியாதை நிமித்தமாக பேச வேண்டும்.


எலும்பு இல்லாத நாக்கு எப்படி வேண்டுமானாலும் திரும்பும். அதனாற்தான் வள்ளுவர் 'நா காக்க' என்று குறிப்பிட்டுள்ளார். சாதி, மதம், பாலியல், இனவெறுப்பு போன்றவற்றை பேச்சுக்களில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நட்புணர்வுடனும், கள்ளங்கபடமற்ற மன நிலையுடனும் இன்முகத்துடனும் நேர்மையுடனும் திறந்த மனதுடனும் ஒருவர் பேசும் போது அது சிறப்பானதாகும். அறிவுக்கூர்மையுடனும், நம்பிக்கையுடனும் பேசும்போது கேட்பார்கள். பேசிய வார்த்தைகளை மீளத் திருப்பெற முடியாது, ஆதலால் கவனித்து நாவடக்கத்துடன் உண் மையைப் பேசுங்கள் தெளிவாகப் பேசுங்கள். என்றுமே தெளிவான பேச்சு சிந்தனையைத் தூண்டும். பேசுபவரையும், கேட்பவரையும் சிறப்படைய வைக்கும்.

இனியென்ன, உங்கள் பேச்சு அடுத்தவரை மகிழ் விக்கட்டும்... தைரியமாயப் பேச ஆரம்பியுங்கள்.●

யோ.ஜஸ்ரின்

# படிப்பது எப்படி?

S.சுரேஸ்குமார் Bsc (Hons).MBA(Lon)



நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

எனது பெயர் மீரா

- நான் தரம் 12 இல் படிக்கிறேன் 2 மாதத்தில் பரீட்சைக்குத் தயாராகப் போகிறேன்
- ஆசிரியர் வகுப்பில் கற்பிக்கும் போது நான் கவனமாகச் செவிமடுப்பேன்
- கற்பிக்கும் விடயங்களை அன்றைய தினமே வாசிப்பேன்
- ஒரு சில நாட்களின் பின்னர் அவற்றை எல்லாம் மீண்டும் ஞாபகமூட்டிக் கொள்வேன்
- நான் ஒரு போதும் தொடர்ந்து மணித்தியாலக் கணக்கில் படிக்கமாட்டேன. நாற்பது அல்லது நாற்பத் தைந்து நிமிடங்கள் படித்த பின்னர் சிறிது நேரம் ஓய்வுவெடுத்துக் கொள்வேன்.
- நேரசூசிப்படியே படிப்பேன்
- படிக்கும்போது சிறிய ஓய்வு நேரங்களில் பயனுள்ள வானொலி நிகழ்ச்சிகளைச் செவிமடுப்பேன். வீட்டில் சிறுசிறு வேலைகளைச் செய்வேன். வீட்டிலுள்ள சிறு பிராணிகளோடு விளையாடுவேன். அல்லது பூங் கன்றுகளிற்கும் பயனுள்ள தென்னை போன்ற வற்றிற்கும் நீர் ஊற்றுவேன்.
- நான் படிக்கும்போது சுருக்கக் குறிப்புக்கள் எழுதிக் கொள்வேன். முக்கிய விடயங்களின் கீழ், நிறக் கோடிட்டுக் கொள்வேன். பின்பு அவற்றை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வேன்.
- சிலவேளைகளில் கற்றவற்றை நண்பர்களுடன் கலந்து ரையாடுவேன்
- புத்தகங்களை வாசிக்கும்போது அதனுடன் தொடர்பு டையதாக ஞாபகத்திற்கு வரும் வேறு முக்கிய விடயங்களைக் குறிப்புப் புத்தகத்தில் இடதுபக்க நிரலில் எழுதிக் கொள்வேன்.
- நான் காலையில் உடற்பயிற்சி செய்வேன். மாலையில் சகோதரிகளுடன் அல்லது அயல்வீட்டு நண்பர்களுடன் ஏறத்தாழ ஒரு மணி நேரம் வரை விளையாடுவேன்
- படிக்கும் வேளையிலும் இடையிடையே தாய் தந்தையரின் வேலைகளில் உதவி செய்வேன். ஓய்வு எடுத்துக் கொள்வேன்
- நான் படிப்பவற்றைக் கொண்டு பரீட்சையை வெற்றி கரமாக எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பரீட்சையைப் பற்றி எந்தப் பயமும் எனக்குக் கிடையாது.

எனது பெயர் சாந்தி

- நான் தரம் 12 இல் கற்கிறேன். பரீட்சைக்கு இன்னமும் 3 மாதங்கள் உள்ளன.
- இந்த நாட்களில் பாடசாலைக்குச் செல்வதில் பயன் இல்லை. வீட்டிலேயே இருந்தபடி தினமும் பதினெட்டு மணித்தியாலங்கள் வரை படிப்பேன். ஒரு தடவையில் தொடர்ச்சியாக மூன்று நான்கு மணித்தியாலங்கள் வரை படிப்பேன். எனினும் படித்து முடிக்க வேண்டி யவை இன்னமும் பற்பல உள்ளன.
- நான் நித்திரை விழித்துப் படிப்பதுண்டு
- நான் நண்பர்களுடன் பேசுவதுகூடக் கிடையாது
- வீட்டில் எந்த வேலையிலும் தாய், தந்தையருக்கு உதவுவதும் கிடையாது
- சில நேரங்களில் எனக்குத் தலைவலி ஏற்படும்
- பரீட்சையை நினைக்கும் போது எனது உடம்பு சிலிர்த்துக் கொள்ளும்
- குறிப்புக்கள் எதுவும் எழுதி முடியவில்லை
- சிக்குண்ட நூற்பந்து போல மூளை குழம்பி, குழம்பிச் சிக்குப்படுகின்றது.
- எவ்வளவு படித்தபோதிலும் எதுவும் நினைவில் நிற்பது கிடையாது.
- பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களை நிறை வேற்றிக் கொள்ள முடியுமா என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது.

**நீங்கள் யாரைப் போல இருக்கிறீர்கள்?**
**மீராவைப் போல மாற நீங்களும் ஆசைப்படுகிறீர்களா?**
**வாருங்கள் உங்களுக்கு வழி காட்டுகிறோம்.**
**அடுத்த வாரம் முதல் படிப்பதற்கு எளிமையான பயனுள்ள குறிப்புக்கள் உங்களுக்காக....**

தொடரும்...

## சமாதானம் பற்றிய ஒரு அநீதிக் கதை

முதல் முதலாக
ஓநாய்கள் ஆட்டுக்குட்டிகளைக் கவர்ந்தபோது
சமாதான விரும்பிகள் ஒன்றுகூடி
ஏகமனதாக
ஓநாய்களைக் கண்டித்துத்
தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

ஓநாய்கள் மீண்டும் ஆட்டுக்குட்டிகளைக் கவர்ந்த
போது
சமாதான விரும்பிகள்
நீண்டநேரம் தம்முள் விவாதித்து
மீண்டும் ஏகமனதாக
ஓநாய்களைக் கண்டித்துத்
தீர்மானம் நிறைவேற்றினார்கள்.
ஓநாய்களும்
விடாது ஆட்டுக்குட்டிகளைக் கவர்ந்து வந்தன
சமாதான விரும்பிகளும்
தளராது
தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.
ஆடுகள் ஒன்றுதிரண்டு ஓநாய்களை எதிர்த்தபோது
சமாதான விரும்பிகள்
மீண்டுங் கூடிப்
போரை எதிர்த்துத்
தீர்மானம் நிறைவேற்றினார்கள்.
ஆடுகள் தமது கொம்புகளைப் பிரயோகித்ததில்
ஓநாய் ஒன்று கொல்லப்பட்ட போது
கொம்புகளாற் தாக்குவது
யுத்த விதிகட்கு முரணானது எனவும்
பற்களையும் நகங்களையும் விட வேறெதையும்
பாவிப்பது
அநாகரிகமானது எனவும்
சமாதான விரும்பிகள்
புதிய தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

ஆடுகட்குப் பற்களாற் போர் புரியத் தெரியாததாலும்
தமது குளம்புகள் மொட்டையானவை என்பதாலும்
கொம்புகளாலேயே போரிட்டன
சமாதான விரும்பிகட்குப்
போரை நிறுத்த வழிதெரியாததாலும்
தீர்மானங்களை நிறைவேற்றுவதை விட
வேறேதும் இயலாததாலும்
ஆடுகளின் அநாகரிகமான போர்முறையைத்
தொடர்ந்துங் கண்டித்துத்
தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

ஓநாய்கள்
சமாதானத்துக்கு உடன்படாவிட்டாலும்
ஆடுகள் அநாகரிகமானவை என்று கூறி
அவற்றை அண்டுவதை நிறுத்தின.
சமாதான விரும்பிகள்
ஆடுகளின் அநாகரிகமான நடத்தையை
மன்னிக்க மறுத்தார்கள்
ஆயினும்
ஆடுகள் பாதுகாப்பாக இருந்தன.

தாக்குவதற்கு கொம்பும் போர்க்குணமும் கொண்ட
ஆடுகளைக் கொல்வதற்காக
ஓநாய்கள் போரிட்ட போது
சமாதான விரும்பிகள் ஈட்டிகள் கொடுத்துதவினார்கள்.
அழிக்கப்படாமல் எஞ்சிய ஆடுகள்
கடந்த கால கசப்புகளை மறந்து
ஒன்று பட்ட காட்டுக்குள்
ஒற்றுமையோடு வாழ வேண்டுமென
சமாதான விரும்பிகள் கேட்டுக் கொண்டாஉகள்.

அமைதி திரும்பிய பின்னும்
ஓநாய்கள் ஆட்டுக்குட்டிகளைக் கவர்ந்தபோது
சமாதான விரும்பிகள் ஒன்றுகூடி
ஏகமனதாக
ஓநாய்களைக் கண்டித்துத்
தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

*மூலம் : சி.சிவகேசரம் வடிவமாற்றம் - வரணியூரான*

# வீடுகட்டும் போது...

நாம் நம் வாழ்நாளில் நமக்கென்று வசிக்க வீடு கட்டுவது ஒருமுறைதான். நாம் வீடு கட்டத் திட்டமிடும் பொழுது நம் மனைவியைக் கூட கலந்து ஆலோசித்துச் செயல்படுவது இல்லை. அப்படியே கலந்து பேசினாலும், நம் சக்திக்குத் தகுந்தாற்போல திட்டமிடும்பொழுது நம்மையும், நம் குழந்தைகளையும் மட்டுமே மனதில் கொள்கிறோம்.

வீடு என்றவுடன் வராந்தா (தாழ்வாரம்), ஹோல், இரண்டு படுக்கை அறைகள், சமையல் அறை, சாப்பாட்டு அறை, பூஜை அறை, பொருள் வைப்பு அறை, குளியல் மற்றும் கழிப்பறை என்பது மட்டுமே நம் திட்டமாக இருக்கும். வராந்தாவிற்கு வெளியே கார், இருசக்கர வாகனம் நிறுத்த வசதியான மூடு முன்றில் (Porch) வேண்டும்.

வீட்டின் வடிவமைப்புக்குத் தகுந்தாற்போல் நாம் அனுசரித்து இருக்கப் போகிறோமா அல்லது நம் தேவைக்குத் தகுந்தாற்போல் நாம் வடிவமைக்கிறோமா என்பதே கேள்வி. முக்கியமாக நம்முடன் இருக்கும் முதியோர்களையும் மனதில் வைத்து (எதிர் காலத்தில் நமக்கும் முதுமை வரலாம்) கட்டப் போகும் வீட்டை, கட்டிட வடிவமைப்பாளர் (Architect) ஆலோசனையுடன் வடிவமைத்தால் அனைவர்க்கும் பயனுள்ளதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

கட்டிட வடிவமைப்பின் போதும், கட்டுமானத்தின் போதும் செய்யக்கூடிய சிற்சில மாறுதல்களினால் நம்முடன் வசிக்கும் முதியோர்கள் வீட்டின் பல பகுதிகளுக்கும் எளிதாகவும் தடங்கலின்றியும் சென்று வரலாம். முதியோர்கள் தங்கள் அறையிலிருந்து கூடம், சாப்பாட்டு அறை, பூஜை அறை சென்று வரத் தகுந்தபடி வடிவமைப்பு அமைய வேண்டும்.

முதியோர்கள் வசதிக்காக வீட்டிற்குள் நுழைய சரிவுப்பாதை (Ramp) அமைக்கலாம். வீட்டின் நுழைவாயில் படிகளில் ஏறுமிடம், மாடிப்படி, குளியறைகளில் கைப்பிடிக் கிராதி (Hand rails) அமைப்பதும், குளிக்குமிடம், கழிவறைக்கருகில் கைப்பிடிக் கம்பி (Grab-bar) அமைப்பதும் அவர்கள் எளிதில் நடமாட உதவும். பெரும்பாலும் குளியலறையில் வழுக்கி விழுந்து தொடை எலும்பின் மேல் பகுதி முறிவு ஏற்படலாம். குளியறை தளத்தில் வழுக்காமலிருக்க Anti-skid tiles போடவேண்டும்.

தரையிலும், பிற அறைகளுக்குச் செல்லும் வழிப் பாதையிலும் சமதளமாகவும், வெளிச்சமாகவும், தளம் வழுக்காமலும் (Anti-skid tiles அல்லது சற்று சொரசொரப்பான சிமென்ட் தளம்) இருக்கவேண்டும். இந்த ஏற்பாட்டினால் முதியோர்கள் வீட்டினுள் சிரமமின்றி நடமாடுவது எளிதால்.

முதியோர்கள் வசிக்கும் அறை நல்ல காற்றோட்டமும், வெளிச்சமும் கிடைக்கும் வகையில் யன்னல்கள் அமைந்திருக்க வேண்டும். அவர்கள் ஆடைகளும், புத்தகங்களும் வைக்கும் அலமாரிகள் உயரம் அதிகமின்றி, சிரமமின்றி எடுக்க வசதியாக இருக்க வேண்டும். அவர்கள் உபயோகிக்கும் கட்டில்கள் உயரம் குறைந்து அகலமாகவும், நாற்காலி, மேசைகள் அதிக உயரமின்றி படிப்பதற்கு வசதியாகவும் இருக்க வேண்டும்.

விளக்கு, இரவு விளக்கு, காற்றாடி, குளிர்சாதனப் பெட்டி ஆகியவைகளின் விசை இயக்கிகள் (Switches) முதியோர்கள் கைக்கெட்டும் தூரத்தில் அமைக்கப்பட வேண்டும். தொலைபேசி, படுக்கைக்கு அருகில் கம்பிவடம் (Cable wire) தடுக்கி விடாமல் இருக்க வேண்டும். அவசரத்திற்கு உங்களை அழைக்க படுக்கைக்கருகில் அழைப்பு மணி அமைப்பது (Calling Bell) நல்லது.

பெரியோர்கள் முதியோர்கள் நம் வீட்டின் பொக்கிஷங்கள். அவர்கள் அனுபவங்கள் நாம் வாழ வழி காட்டுகின்றன. அவர்களை அலட்சியப்படுத்தாமல் பாதுகாப்போம். அவர்களிடம் ஒவ்வொரு நாளும் உரையாடி சிறிது நேரம் செலவு செய்வோம். அவர்கள் மகிழ்ந்தால் நாமும் மகிழ்வோம். அவர்கள் உடல் நலனிலும், மன நலனிலும் அக்கறை எடுத்துக் கொள்வோம்.

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை

# கப்பல் ஓட்டிய தமிழர்கள்

வேட்டி கட்டிய இலங்கைத் தமிழர்களைப் பார்க்க அமெரிக்கர்கள் அன்று திரண்டிருந்தார்கள்.!

அமெரிக்காவின் பிரசித்தி வாய்ந்த "குளோசெஸ்ரர்" துறைமுகத்தில் திரண்டிருந்த அமெரிக்க மக்கள்,

அவர்களை விசித்திரமாகப் பாரத்தார்கள்!

அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களுக்குச் "சுடச்சுட" நல்ல செய்தி!

"அமெரிக்கா வந்துள்ள இலங்கையின் முதல் உத்தியோகப்பற்றற்ற தூதுவர்கள்"

இவ்வாறு நியூயோர்க்கிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த "போஸ்ரன் குளோப்" என்ற தினசரி எழுதியது.

இத்தனைக்கும்

அவர்கள் என்ன செய்தார்கள்?

நினைத்துக்கூடப் பாரக்கமுடியவில்லை.

ஆழ்கடலில் சாகசப் பயணம் நிகழ்த்திய அந்த வரலாற்று நாயகர்களுடைய தீரக்கதையை, சரித்திரம்தான் சில சமயம் மறந்தாலும், ஆண்டாண்டு காலம் சென்றாலும் ஓயாது ஓலமிட்டுக் கொண்டிருக்கும் கடல் அன்னை மறக்கமாட்டாள்!

நெஞ்சு சிலிர்க்கிறது!

1930 ஆம் ஆண்டில், உள்ளூர் வேப்ப மரத்தில், வல்வெட்டித்துறை சுந்தர மேஸ்திரியாரினால் அழகுற அமைக்கப்பட்ட இரட்டைப் பாய்மரக் கப்பலில்,

அந்தப் பெருங்கடலினுள் கப்பல் விட்டு வெற்றிப் பயணம் நடாத்தியிருக்கிறார்கள்

வல்வெட்டித்துறைச் சிங்கங்கள்!

அத்திலாந்திக் சமுத்திரத்தில் அடலேறுகளாகப் பவனி வந்த "கதை" ஒரு வரலாறு! ஆம்,

ஒரு சரித்திரம் என்று கூடச் சொல்லாம்!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தது ஒரு சரித்திரமென்றால்

வல்வெட்டித்துறைக் கடலோடிகள் திகழ்ந்தனர்!

இந்திய மன்னர்கள் வல்வைக் கப்பலோட்டிகளைக் கௌரவித்தனர்!

இன்று நேற்றல்ல —

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கௌரவத்தைப் பெற்றனர்!

அப்பொழுதே ஆழ்கடலில் தாம் கட்டிய கனமிகு கப்பல்களைக் கடலோட விட்டார்கள்!

இந்திய மன்னர்கள் மட்டுமல்ல,

ஒல்லாந்தரும், போர்த்துக்கீயரும், பிரித்தானியரும்,

வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்குத் தனி மதிப்பளித்தார்கள்!

முதலாம் மகாயுத்தத்துக்கு முன்னர் - இந்தியாவுக்கும், மலாயாவுக்கும், பர்மாவுக்கும், பாய்மரக் கப்பல்கள் வல்வெட்டித்துறைத் துறை முகத்திலிருந்து

– ராஜகோபால் –

1



அமெரிக்காவில் அன்று ராஜாங்க மரியாதையுடன் வரவேற்கப்பட்டவர்கள்.

இலங்கையின் வடக்குக் கரையோரப் பகுதியான வல்வெட்டித்துறை என்ற சிற்றூரில் பிறந்தவர்களாயினும்

பிறந்த ஊரின் பெருமையையும், பெற்ற நாட்டின் மதிப்பையும் உலகறியச் செய்து விட்டார்கள்!

இன்று கூட,

வளர்ந்துவிட்ட விஞ்ஞான யுகத்திலும்,

வங்காள விரிகுடாவில்-

மிகசக்தி வாய்ந்த நவீன ராட்சதக் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் பெரும் பெரும் அபாயங்களுக்குள்ளாகிக் கடலோடு சங்கமித்து விடுகின்றன.

கோடிக்கணக்கான ரூபா செலவில், நவீன இயந்திரங்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன இப்போதைய கப்பல்கள்!

ஆனால் -

மனிதன் அப்புலத்தரையில் காலடி வைத்தது ஒரு சாதனையென்றால்,

இதுவும் ஒரு சரித்திரம் தான்!

இன்று புதுப்புதுச் சாதனைகள்,

பத்திரிகைகளைத் திறந்ததும், "சாதனை, சாதனை" என்ற செய்திகள், பாராட்டுக்கள்!

ஆனால் -

இவற்றையெல்லாம் தூக்கியடித்து விடுவது போல, சாதனைகளுக்கே சவால் விடும் சாதனைகளைச் செய்வோம் என்று வல்வெட்டித்துறையின் கடந்தகாலம் சொல்லாமல் சொல்லுகிறது.

- மாலுமி சாஸ்திரத்தை முற்று முழுதாகக் கரைத்துக் குடித்தவர்கள்!

- வான சாஸ்திரத்தைக் கற்றுத் தெளிந்தவர்கள்

ஆழ்கடலை வெற்றி கொண்டு கடலோடுவதில் "தனிக்காட்டுராஜா" க்களாக

படை படையாகச் சென்று வந்தன! இரண்டாம் மகாயுத்தம் வரை இது தொடர்ந்தது

அரிசியும், நெல்லும், முத்துச் சம்பாவும், கறிச்சரக்கும் அங்கெல்லாம் சென்று ஏற்றிக்கொண்டு வந்து தமது கஸ்டத்தைத் தீர்த்த பெருமை வல்வெட்டித்துறைக் கடலோடிகளையே சாரும்

அதிராம் பட்டினம்,
நாகபட்டினம்,
காக்கிநாடா,
கல்கத்தா,
சிட்டகொங், ரங்கூன், பினாங்கு,
போன்ற இடங்களிலெல்லாம்
வல்வெட்டித்துறைக் கப்பலோடிகள் கப்பல் செலுத்திய "கதைகள்"
ஏராளம்! ஏராளம்!

தொடரும்...

**முதியோர்களுக்கான** 8ம் பக்க தொடர்ச்சி...

கொள்வனவு செய்வதற்கு, ஆகக்கூடியது ரூபா. 10,000 வழங்கப்படுகின்றது)

**பிரதேச மட்ட முதியோர் சங்கங்களினை நிறுவுதல்**

கிராமிய மட்ட சங்கங்களின் சேவைகளினை மிகவும் அர்த்தமுள்ளதாக விரிவுபடுத்தல். அனைத்து கிராமிய மட்ட முதியோர் சங்கங்களினை இணைத்து, முதியோர் சங்கங்கள் பிரதேச மட்டத்தில் அமைக்கப்படுகின்றன. பிரதேச மட்ட முதியோர் சங்கங்களினை ஊக்குவிப்பதற்கு, முதியோர்களுக்கான தேசிய செயலகம், ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூபா 7500 கொடுப்பனவினை வழங்குகின்றது.

**ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னரான கருத்தரங்குகளினை நடாத்துதல்.**

ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நெருங்கிக் கொண்டிருக்கின்ற அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் இதில் பங்குபெறுவர். சுறுசுறுப்பான ஓய்வூதியராக அவர்களைத் தயார்படுத்தல் மேலும் ஓய்வு பெற்றதன் பின்னர் வாழ்க்கையினைத் திட்டமிட்டு தலைமைத்துவம் வகிப்பதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தல் இதன் நோக்கமாகும்.

**விழிவெண்படலமுள்ள முதியோர்களுக்கு கண்வில்லைகளினை வழங்குதல்.**

இதனைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரியின் மாதாந்த வருமானம் ரூபா. 5,000ஐ விடக் குறைவாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கண் சத்திரசிகிச்சை வைத்தியரினால் வழங்கப்பட்ட மருந்து சிட்டை.

**"வடிஹிட்டி ஆவரண கப்பகறு" சுவீகரிப்பு முறைமை.**

இம் முறைமையின் கீழ் கைவிடப்பட்ட முதியோர் ஒருவர் ஒவ்வொரு மாதமும் ரூபா 250ஐ அவரின் சுவீகரிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். தனியாரும் இத்திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்ய முடியும்.

**முதியோர் அடையாள அட்டைகள் வழங்குதல்.**

60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் முதியோர் அடையாள அட்டைகளை கிராம உத்தியோத்தர். பிரதேச செயலகம் அல்லது முதியோர்களுக்கான இத்தேசிய செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். முதியோர் அடையாள அட்டைக்கு உரித்துடையவருக்கு, அரச மற்றும் தனியார்த் துறை சேவைகளில் முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக்களுக்கு மேலதிக வட்டியினைப் பெற்றுக் கொள்ள முடியும், மருந்துகளினைக் கொள்வனவு செய்யும்போது தேசிய மருந்தாக்கற் கூட்டுத் தாபனத்தில் (ஓசுசல) 5% விலைக் கழிவினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

நீங்களும் உங்கள் வீட்டிலுள்ள உங்கள் முதியவர்களுக்கு இச் சேவைகள் கிடைக்கப் பெறுவதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

(சர்வதேச முதியோர் தினத்தை ஒட்டி இப் பதிவு இடம்பெறுகின்றது)

# சுவாமி வம்பானந்தா

**புரிந்தால் புன்னகை செய், புதிர் என்றால் புருவம் உயர்த்து பிதற்றல் எனத் தோன்றின் பிழையும் திருத்து...**

வடக்குத் தேர்தலிலை நிண்டிட்டு எங்கடை பெரிய மந்திரியார் கொழும்புக்குத் திரும்பி வர ஏலாது எண்டு ஒருதரும் அவருக்கு சம்பந்தி சிங்களவர் எண்டதாலை அவர் எங்கடை பக்கம்தான் எண்டு இன்னொருதரும் சொல்ல கடைசியாய் அதிகம் மேன்மையானவர் ஐயோ உங்களுக்கு தலைமை தாங்க வடக்கிலை ஒருத்தரும் இல்லையோ உங்களை நல்லா ஏமாத்திப்போட்டாங்கள் எண்டு எங்களுக்காக யாழ் தேவியிலை வந்து அழுதிட்டுப் போனவரல்லோ. அங்காலுப்பக்கம் சனத்தைத் திசை திருப்பி தடுமாறச் செய்யப் பாக்கேக்கை இஞ்சையும் சிலபேர் தீக்குளிப்பம், தெரிவை மாத்துவம், இவர் சரி வரார், கொள்கையை விடுகிறார், வடக்கு தெரியாதவர் இவர் வேண்டாம், சம்மந்தி வேற சிங்கள உறவுக்காரன், என்ன தெரியும் இவருக்கு நேற்று வந்தவர், எண்டெல்லாம் கதைச்சவையல்லோ.

ஆர் என்ன சொன்னாலும் எங்கடை சனம் தெளிவாய் இருந்தது. ஐயாவும் ஆரம்பத்தை விடப் போகப் போகத் தெளிவாகின மாதிரித்தான் தெரியுது. வீரசிங்கம் மண்டபத்திலை நீலன் திருச்செல்வமும், அமிர்தலிங்கமும், யோகேஸ்வரனும் ...... எண்டவர் வல்வெட்டித்துறையிலை நிண்டு தம்பி மாவீரன்தான் எண்டவரல்லோ. சனங்கள் 132255 பேர் அவருக்குப் பின்னாலை நிண்டதுக்கு காரணம் ஆர் எண்டு விளங்குதோ? இவர் சரிவரார் எண் டவை இப்ப அவற்றை வெற்றி தங்கடை வெற்றி எண்டு வெடிகொழுத்துகினம். முந்தி அதிகாரம் இல்லாத பதவி, வெறும் பொம்மை எண்டவை. இப்ப அவர் அதை செய்ய வேணும், இதை செய்ய வேணும், தலைவனை மறக்காமல் நடக்க வேணும் எண்டு சொல்லுகினம். அது சரி அதி காரம் இல்லாத பதவியெண்டால் இவ்வளவும் எப்பிடி செய்ய ஏலும் எண்டு யோசிக்கிறேல்லையே.

❖ ❖ ❖

எழிலான முந்தின அரசியல்காரர் வீட்டை வந்திட்டார், அதாலை பெண்சாதி வீட்டுக்குத் தூரமாகியிட்டா, எண்டு கடைசிநேரத்திலை டுப்பிளிக்கேற் பேப்பர் ஒண்டு ஓடித்திரிஞ்சு சனத்தைப் பேய்க்காட்டப்பாத்ததல்லோ. இதைத்தூக்கி வைச்சுக்கொண்டு எங்கடை நடுநிலைமை யாழ்ப்பாண ரீவியும் சுத்துமாத்துப் பண்ணினது. நடுநிலைமை எண்டால் என்னெண்டு தெரியாதவனெல்லாம் நடுநிலைமையைப் பற்றிக் கதைக்கிறதும் தாங்கள் நடுநிலைமையிலை நிக்கிறம் எண்டு சத்தியம் பண்ணுறதும் ஆகக் கொடுமை பாருங்கோ. அது சரி எல்லா வெறிகாரனும் தான் ஸ்ரெடியாய் நிக்கிறன் எண்டு சொல்லுறது வழமை தானே. என்ன சொன்னாலும் அவைக்கு கடைசி நேரத்திலை வந்த சுடலை ஞானம் அவை ஆர் எண்டதை தெரியாத சனத்துக்கும் தெரியச்செய்திட்டுது.


❖ ❖ ❖

ஒருபக்கம் மட்டும் பிழை சொல்லக்கூடாது பாருங்கோ. பிழை ஆர் செய்தாலும் பிழைதான். யாழ்ப்பாணத்திலையும் கொழும்பிலையும் கொமி னிக்கேசன் நடத்தி, வெளிநாட்டுக் காசு மாத்தினவர் கடைசி நேரத்திலை செய்த சுத்துமாத்து ஒட்டு மொத்தமாய் எல்லாரையும் கேவலப்படுத்தின மாதிரிப் போட்டுது. செல்வாக்கானவையின்ரை படத்தோடை தன்ரை நம்பரைச் சேர்த்து ரீமிக்ஸ் படங்காட்டினவரல்லோ.

ஆர் என்ன படங்காட்டினாலும் சனங்கள் தெளிவாயிருக்கிற வரைக்கும் இந்தப்படங்கள் ஓடாது பாருங்கோ.

❖ ❖ ❖

படம் எண்டு சொல்லத் தான் ஞாபகம் வருகுது. யாழ்ப்பாணத திலை 'மெட்ராஸ் கஃபே" காட்டுகினமாம், பாத் தனீங்களே. இந்தியாவிலையும் மற்ற நாடு களிலையும் இந்த 'மெட்ராஸ் கஃபே" சர் சையை ஏற்படுத்திக் கொண்டிருக்கு.



அப்பிடியிருக்க யாழ்ப்பா ணத்திலை சாவகச்சேரி, சுன்னாகம், நெல்லியடி யாழ்ப்பாணம், நகரங்களிலை வைச்சிருக்கிற எல்.சி.டி பனல் வழியாக் காட்டுகினமாம். தமிழர் மனதை புண்படுத்தும் எண்டதாலை பிரித்தானி யாவிலையும் தமிழ் நாட்டிலையும் இந்தப்படத்துக்கு பலத்த எதிர்ப்பு எவரும் திரையிடயில்லை.

ஆனால் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம், நெல்லியடி நகரங்களிலை முந்தி அரசாங்கமும் பச்சைச் சட்டைக்காரரும் என்ன அபி விருத்தி செய்தவை எண்டு காட்டப் பாவிச்ச எல்.சி.டி பனல் வழியாய்தான் இப்ப 'மெட்ராஸ் கஃபே" காட்டுகினமாம். ஆர்காட்டுகினம் எண்டு நான் ஒண்டும் சொல்லயில்லை. நீங்கள் என்ன சொல்லுறியள்.

❖ ❖ ❖

திருவிழா நீதியாய் நியாயமாய் நடக்க வேணும் எண்டு எல்லாரும் கேட்டவை. திருவிழா முடிஞ்ச பிறகு பேட்டி குடுத்த சம்பந்தமான ஐயாவும் திருவிழா நீதியாய் நியாயமாய் நடக்கயில்லை எண்டு தான் சொன்னவர். ஆனால் திருவிழா முடிஞ்சு காளாஞ்சி வாங்கிற நேரம் நீங்களும் நீதியாய் நியாயமாய் நடக்க யில்லை எண்டு ஒரு கதை உலாவுது. உத்தியோக பூர்வமாய் வராத முடிவிலை வெளியிலை நிண்டவரை உத்தியோக பூர்வமுடிவிலை உள்ளுக்கை செருகி, உள்ளுக்கை நிண்டவரை வெளியிலை விட்டிட்டினம் எண்டு சொல்லுகினம். மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிக்கயில்லை எண்டால் இப்பிடி யானவை செய்யப்போற நிர்வாகத்திலை சாதாரண சனத்துக்கு நீதியும் நியாயமும் கிடைக்கு மெ ண்டு நம்புறீங்களோ?.

எல் லாருக் கும் கதிரைச் சவாரிவிட ஆசை தான் பாருங்கோ,

போனஸாக் கிடைச்ச கதிரை யைக்கூட கூட எனக்கு தாறாங் களில்லை எண்டு கதிரையிலை ஏறக்கூடஏலாத வயதிலை ஒருத்தர் சத்தம் போடயில்லையே. அதுபோலை அண்ணைக்கும் தன்னைமாதிரி தம்பி யையும் கதிரையிலை ஏத்திவிட ஆசைவரும்தான். அமைச் சராக்கவும் ஆசைவரும், அதுக்கு நடக்கிற கூத்தைப் பாக்கிறியள் தானே. வெளியிலை அதிகம் தெரியா ட்டிலும் உள்ளுக்கை கருகுகிற வாடை பக்கத் திலை இருக்கிறவைக்கு மணக்கும். ஆனால் சனத்தின்ரை ஆசையை – தீர்ப்பை நீங்கள் மாத்தினால் எதிர்காலத்திலை சனம் வேறை மாதிரி ஆசைப்பட்டிடும் பாருங்கோ.

❖ ❖ ❖

நக்குகிற என்னத்துக்கோ செக் கென்ன............. எண்ட பழமொழி இதோடை மூண்டு தரம் சொல்லிப்போட்டன். உங்க ளுக்கு கோவமெண்டால் அதுக்கு பேப்பரை கிழியா தையுங்கோ. நீங்கள் சும்மா கிழிச்சுப்போட்டுப் போவியள், பேப்பர் நடத்துற பொடியள் என்னை யல்லோ கிழிக் கிறாங்கள். நான் ஒரு தவிசாள ரைப்பற்றி எழுத அந்தப் பொடியன் என்னிலை உள்ள கோபத்தை முரசொலியிலை காட்டியிருக்குது. அதுகும் அவரைப் பற்றி "ஜனாதிபதியிட்டையே நொடி கேட்டவர்" எண்டு பெருமையாய்த்தான் எழுதின னான். மோப்பம் பிடிக்கிறவையோடை அவருக் கிருக்கிற நட்பைப் பற்றியோ, உயர்பாதுகாப்பு வலயத் துக்கை சனத்தின்ரை காசிலை பச்சைச் சட்டைக் காரருக்கு வெளிச்சம் பூட்டினதைப் பற்றியோ நான் மூச்சுக்கூட விடயில்லைப் பாருங்கோ. இப்பிடியிருக்க விளம் பரத்துக்காக குடுத்த முரசொலியை பொடியன் தனக் கெதிராய் குடுத்த நோட்டீஸ் எண்டு நினைச்சு ஓடியோடி வாங்கிக் கிழிச்சுப்போட, பேப்பர் நடத்துற பொடி யள் என்னைக் கிழிச்சுப்போட்டாங்கள்.

அரசியல் வாதியெண்டால் சண்டித்தனம் செய்தால்தான் மதிப்பு எண்டு நினைச்சால் அதுக்கு பேப்பரோடையே சண்டித்தனம் செய்யிறது.


❖ ❖ ❖

வம்பானந்தா ஒருத்தருக்கும் எதிரியில்லைப் பாருங்கோ. உண்மைக்கு நண்பன். அவ்வளவுதான். போற பாதை சரியில்லை எண்டால் அதைச் சொல்லுறது என்ரை கடமை. பாதையும் பயணமும் உங்கடை. அடுத்த முறை அதுகளை விரிவாய்க் கதைப்பம். நீங்கள் vampanantha@g mail.com க்கு தொடர்ந்து எழுதுங்கோ. அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.

---

**சிரஞ்சீவியாக -5**

# சிரித்திரன் சிவஞானசுந்தரம்



ஈழத்து தமிழ்ப் பத்திரிகை உலகிலே கேலிச்சித்திரக் கலையை ஆரம்பித்து புதியதோர் பொற்காலம் படைத்தவர். நகைச்சுவை எழுத்தைத் தங்க நகையென சாதாரண மக்களுக்கும் வழங்கி பத்திரிகை வாசிப்பில் அவர்களுக்கு மகிழ்ச்சிப் பரபரப்பை ஊட்டியவர். அவர்தான் சிரித்திரன் சிவஞானசுந்தரம் என்னும் கலைஞன். அக்கலைஞன் மேடைகளில் ஏறியதில்லை. பேசியதில்லை. வீண் சலசலப்புகளில் ஈடுபட்டு அதைக் கலை என்று காலங்கழிக்கவுமில்லை. ஆனால், அமைதியாக தன்னைக் காட்டிக்கொள்ளாமல் இருந்து, நகைச்சுவை ஆயுதத்தை ஏந்தி, சமுதாயத்தில் பெரும் புரட்சி செய்தவர்.

நமது மண்ணில் தமிழர் சமுதாயத்தின் பெருநோயான சாதிவெறி, மூட நம்பிக்கைகள், போலித்தனங்கள், யாவற்றையும் அவரது ஆயுதம் குத்திக் குதறியது. ஆனால் மக்களின் இதயங்களை புண்படுத்தும் கணைகளாகப் பாய்ந்ததில்லை. சிந்தனையைக் கிளறி பண்படுத்தும் பண்பு செறிந்ததாகவே திகழ்ந்தது.

நமது மண்ணில் முற்காலத்தில் நடைபெற்ற தமிழ்க் கூத்துக்களில் பச்சையாக ஆபாசம், வசைபேசுவது அல்லது பாடுவது, அர்த்தமற்ற சேட்டைகள் செய்வதுதான் நகைச்சுவையென்று கருதப்பட்டு வந்தது. இங்கு வெளியான தமிழ்த் திரைகளிலும் நகைச்சுவை குறிப்பிடும் அளவிற்கு வளர்ந்த கலையாக இருக்கவில்லை.

சுந்தரின் கேலிச்சித்திரமான சவாரித் தம்பரோடுதான் ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை உலகில் கேலிச்சித்திரத்தின் பொற்காலம் ஆரம்பமாகியது. சவாரித்தம்பர் மாட்டுவாலை முறுக்கிவிட்டது போல் வாசகர்களிடையே பெரிய கிளர்ச்சியையும் சுந்தர் கிண்டிவிட்டார்.

முதன்முதல் தினகரனிலும், பின்பு வீரகேசரியிலும் அவரது கேலிச்சித்திரங்கள் வெளியாகின. சவாரித்தம்பரோடு தொடங்கி பின்பு வெவ்வேறு குணஇயல்பு கொண்ட பாத்திரங்களைப் படைத்து, அவைகளை வெவ்வேறு கோணங்களில் வைத்து சமுதாயத்தின் கோணல்களைச் சிரிப்பால் சாடினார். மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அவர்களின் நுண்ணிய உணர்வுகளையும் தத்துவச் செறிவோடு, சிரிப்புச் சிதறல்களாக அவர் தெளித்தார்.

வாழ்க்கையை அவர் சிரிப்பு என்ற தத்துவத்திலே பார்த்துச் சிரித்தார். மக்களையும் சிரிக்க வைத்து, சிந்திக்கச் செய்தார். அவரது கேலிச்சித்திரங்களிலும், நகைச்சுவை எழுத்திலும் நம் நாட்டு பிரதேசங்களின் மண் வாசனை கமழ்ந்தது அவரது தூரிகையின் கோடுகள் பாத்திரங்களின் குணாசம் சங்களையும் உணர்ச்சிகளையும் நுட்பமாக வெளியிட்டது. சுந்தரின் சவாரித்தம்பர், சின்னக் குட்டி, பாரிமாமி, மைனர்மச்சான், மிஸ்ரர் அன் மிஸ்ஸிஸ் டாமோடிறன், சின்னக்கிளி முதலிய பாத்திரங்கள் குடிசை வாழ் மக்களோடும் உயிர் பெற்று வாழத் தொடங்கின. அச்சிரஞ்சீவி மாந்தர்கள் தமது "பிரம்மா" புகழ் பேசுபவர்களாக என்றும் திகழ்வார்கள்.

சித்திரக்கலையில் இளமையிலிருந்தேரசனையும் ஆர்வமும் ததும்பியிருந்த சுந்தர் ஓவியராக வேண்டும் என்று கனவு கண்டு வந்தார். ஆனால் அவரது பெற்றோர் அவரைக் கட்டிடக் கலையைப் பயிலும் வண்ணம் இந்தியாவிற்கு அனுப்பினர். ஓவியக் கலைப் பசியால் தவித்த சுந்தருக்கு அங்கு நல்ல "தீனி" கிடைத்தது போல் தக்காரே போன்ற பிரபல ஓவியர்களது நட்பு வாய்த்தது. கணக்குப் பாரக்கும் கட்டிடக்கலைப் படிப்பை விட்டுவிட்டு, சுதந்திரமாக கற்பனை உலகில் வானம் பாடியாகப் பறப்பதற்கு, தான் காதலித்த ஓவியக் கலையைக் கடிமணம் புரிந்தார். இந்தியாவில் பிரபலமடைந்த "கொஞ்ச்" என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராக கறஞ்சியாவிற்கு இந்திய ஓவிய நண்பர்கள் சுந்தரை அறிமுகம் செய்தனர். சுந்தர் வரைந்து கொடுத்த கேலிச சித்திரத்தை கறஞ்சியா "கொஞ்ச்சில்" பிரசுரித்ததோடு சுந்தரைக் பாராட்டி சிறுதொகைப் பணத்தையும் கொடுத்தார். அன்றிலிருந்து சுந்தர் "கொஞ்ச்" பத்திரிகையின் கேலிச்சித்திரராக பணியாற்றினார். பின்பு "பிலிற்ஸ்" பத்திரிகையில் அதே பணியைச் செய்தார்.

இந்தியாவில் அவர் இருந்த காலத்தில் ஓவியர்கள், எழுத்தாளர்கள், சங்கீத வித்து வான்கள், நடிகர்கள், அரசியற் தலைவர்கள், சமயப் பெரியார்கள் முதலியோரின் சூழலைப் பெரிதும் நாடினர். அவர்களில் சிலரது நட்பும் பாராட்டும் அவருக்கு கிடைத்தது.

சுந்தர் இலங்கைக்குத் திரும்பிய காலத்திலேதான் அவரின் கேலிச்சித்திரத் திறனை இனங்கண்ட அன்றைய தினகரன் ஆசிரியர் க.கையிலாசபதி தினகரனில் கேலிச் சித்திரம் வரைய அவரை அழைத்தார். "சாவரித்தம்பர்" மக்கள் இதயங்களில் சவாரிவரத் தொடங்கினார். இந்து சமயத் தத்துவமும் கர்நாடக சங்கீ தமும் எமது கலைகளின் ஆணிவேர் ஓர் உன் னதக் கலைஞன் கலையில் ஈடுபடும் போது அவன் மனம் அதிலே லயிக்கின்றது. அது ஒரு வித யோகநிலை. அந்தநிலை பண்பட்ட மெய் மறந்த இன்பநிலையில் யோகநிலையில் உரு வாகும் கலைகளே காலத்தால் அழியாத கலை கள் என்று அவர் சுவைத்துப்பேசுவார்.

இலக்கியக்காரரும், சாதாரண மக்களும் ஆவலுடன் வாங்கி வாசிக்கும் சஞ்சிகையாக சிரித்திரனை முப்பது ஆண்டுகள் சுந்தர் வெளியிட்டுள்ளார். வெளியே செல்ல இயலாது நோய்கள் அவரைப் பற்றிக் கொண்ட கடைசிக் காலத்தில் "இந்த உலகத்தில் என்னை விடாது என் மீது அதிக பற்று வைத்திருப்பவர்கள் இந்த நோய்கள் தான்" என்று "ஜோக்" அடிப்பார். அக் காலத்திலும் அவர் கேலிச்சித்திரம் வரைந்தார். எழுதினார், சிரித்திரன் வெளிவந்தது.

சுந்தரின் பேச்சும் மூச்சும் மட்டுமல்ல அவரது குடும்பமே சிரித்திரனோடு ஒன்றி சிரித்திரனுக்காக உழைத்து வந்ததால் நண்பர்கள் அவரையும் "சிரித்திரன்" என்றே அன்புடன் குறிப்பிட்டு வந்தனர். அந்தச் சிரித்திரன் இன்று இல்லை ஆனால் "சிரித்திரன்" பதித்த புகழ்பூத்த புதுமைமிகு வரலாறு என்றுமே மறையாது.

———————நவாலியூர் நடேசன்

# சர்வதேச சிறுவர் முதியோர் தினம் ஒக்டோபர் - 01

சர்வதேச சிறுவர் முதியோர் தினம் ஒக் - 01 நினைவு கூறப்படுவதை முன்னிட்டு இப் பதிவுகள் இடம் பெறுகின்றது.



# நம்பிக்கை வாழ்வைக் கட்டியெழுப்பும் நல்ல தலைவர்களை உருவாக்குங்கள்

மட்டுநகர்ஆயர். யோசப் பொன்னையா ஆண்டகை

பலதுன்பங்களைச் சுமந்த வட-கிழக்கு மக்களின் நிம்மதியானவாழ்விற்கு வழிகாட்டும் நல்ல தலைமைகள சகலமட்டத்திலும் உருவாகவேண்டும். எமது மக்களின் இன்னல்கள் தீர மக்களிடத்தில், ஒற்றுமையுடன் செயல்படுவதற்கு வழிகாட்டும் நல்ல தலைமைகள்,தம் பொறுப்புக்கள், கடமைகளைஅர்ப்பணிப்போடு செயற்படுவதில்தான் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும். கட்டடங்களாளும், வீதிகளாளும் களியாட்டங்களாலும் மட்டும் மக்களின் துயரைத் தீர்க்கமுடியாது. மக்களின் மனங்களின் துயர்கள் இழப்புக்களைத் தாங்கும் மனவலிமையைப் புரிந்துகொள்ளும் தலைவர்களே இன்று உருவாக வேண்டும். இதனை ஒவ்வொரு பொறுப்புள்ள வர்களும் தமது பகுதியில் அடையாளப்படுத்தும் நல்ல தலைவர்களைத் தாம் உருவாக்குதலே காலத்தின் தேவையாகும். சமூகம் முன்மாதிரியாக வாழ மக்களின் ஒற்றுமையையும் வாழ்க்கையில் கொண்டுள்ள நம்பிக்கையுமே முக்கியமானது. இன்று எமது சமூகத்தின் நல்வாழ்வைச் சீரழிக்கும் பலசீர்கேட்டுச் சாதனங் களாலும், போதைகளாலும் சீரழிக்கும்திட்டமிட்ட செயல் களிலிருந்து மக்கள் காக்கப்பட வேண்டு மானால் எமது ஒற்றுமையான செயல களும் நம்பிக்கை வாழ் வைத் தூண்டும் ஆன்மீக சமூக நல்லுறவுமேமிக முக்கியமானது. இவற்றை முன்னெடுக்கும் நல்ல தலைவர்களே இன்றைய காலத்தேவையாகும்







சர்வதேச சிறுவர் தினம் ஒக் 01ல் உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. நமது தேசத்திலுள்ள சிறுவர்கள் மட்டுமன்றி, உலகமெங்கும் வாழும் சிறுவர்களுக்கும் யுத்தமென்பது எதிரானதாகவும், எதிரியாகவும், உள்ளது. எந்தவொரு யுத்திலும் முதலில் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களே. தற்போது சிரியாவிலும், எகிப்திலும் நடைபெற்று வருகின்ற வன்முறைகளால்பல இலட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளர்.நமது தேசத்திலும் யுத்தங்கள் பிள்ளைகளுக்கும் எதிரானதாகவேஇருந்துள்ளது. போருக்குப் பின்னரான தேசம் பிள்ளைகளுக்கான நலன்களுடன் கட்டியெழுப்பப்படுவதற்கு முன்னுரிமை அளிப்பதனை வலிறுத்தல், அவசியமானது. சிதைந:துபோன சிறுவர்களின் வாழ்வினையும், ஒழுங்கமைக்கப்பட்டுள்ள அவர்களது உள - சமூக ஆரோக்கியத்தையும் மீளச் சீர்படுத்த வேண்டியது இந்த தேசத்தின் முன்னுள்ள பாரியதொரு சவால்மிக்க கடமையாகும்.

## தள்ளாத வயதிலும் தளராத ஊடகப்பணி



அளவெட்டி அலுக்கையில் பிறந்த இவர், ஓர் துறைதோய்ந்த ஊடகத்துறைப் படப்பிடிப்பாளர். யாழ்ப்பாணத்தின் மிக முக்கியமான சம்பவங்களைத் தனது புகைப்படக்கருவி மூலம் படமாக்கி ஆவணமாக்கியமை குறிப்பிடத்தக்கது. தனது ஊடகத்துறையில் அரச ஊடகமான லேக்ஹவுஸ் நிறுவனத்தில் பணியாற்றிய பெருமைக்குரியவர். eyes of Sri Lanka எனும் தலைப்பில் இவர் குறித்தான குறிப்பு அண்மையில் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. யோகர் சுவாமிகளது புகைப்படம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கோபுரப் புகைப்படம் என்பன இவரால் படம்பிடிக்கப்பட்ட மிக முக்கியமான படங்களாகும். 84 வயதினை அண்மித்துக் கொண்டிருந்தபோதும் இன்றும் ஊடகத்துறையில் ஓர் படப்பிடிப்பாளராக உதயன், தினக்குரல் பத்திரிகைகளில் கடமையாற்றிக் கொண்டிருப்பது பாராட்டுக்குரிய விடயமாகும். அண்மையில் ஊடகத்துறைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

## நூற்றாண்டை நோக்கி முதுபெரும் புலவர்



இவர் இணுவிலில் 1914ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ம் திகதி பிறந்தவர். அளவெட்டியில் மணம்முடித்து அளவெட்டியில் நிரந்தரமாகவே வாழ்ந்தவர்.

துறைதோய்ந்த தமிழாசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். செய்யுள் இலக்கணத்தையும், பாட்டியல் இலக்கணத்தையும் நன்கு கற்று, செய்யுள் இயற்றலில் தீவிரமாக ஈடுபட்டார்.

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்திய சுவாமி விபுலானந்தர் கவிதைப் போட்டியில் "சுவாமி விபுலானந்தர் நான்மணிமாலை" என்னும் இவரது பிரபந்தத்துக்கு முதற்பரிசு கிடைத்துள்ளது. அதுமட்டுமல்லாமல் "நல்லூர் இரட்டை மணிமாலை" என்னும் நூலும் கொழும்பு தமிழ்ச் சங்க முதற் பரிசு பெற்றுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. இவருடைய செய்யுள்கள் தமிழறிவு பெரிதும் பெறாதவர்களுக்கும் இலகுவாக விளங்கக்கூடிய தன்மை வாய்ந்தன.

முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்களுக்கு 2002ஆம் ஆண்டு இந்து கலாச்சாரத் திணைக்களம் கலாபூஷண விருது வழங்கிக் கௌரவித்துள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

முதலாம் குறுக்குவீதி,மணிப்புரி யாழ்ப்பாணத்திலுள்ள யூட்பிறைனர் அன்ரன் றஞ்சித்குமார் அவர்களால் 27.08.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது